[illegible] ஸ்ரீ மலர் 1925-26

வால்யூம் 16 [illegible]

[illegible]

[illegible]

N25·162

186755

1048

OF THE REGISTRAR OF BOOKS
4- DEC 1925
MADRAS

Regd. No. M. 916.

THE VEDANTA DIPIKA

வேதாந்த தீபிகை.

குரோதனவஸ,

1925—1926.

ஸம்புடம் 16.

கார்த்திகைமீ

NOVEMBER.

ஸஞ்சிகை 2.

பத்ராதிபர்.
கார்யதர்சி. } ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. பத்ராதிபரின் குறிப்புகள்:—கார்யதர்சி.

2. வேங்கடாத்வரீ:—ஸ்ரீ. உப. எம். க்ருஷ்ணமாசார்யர்,
எம். ஏ., எம். எல். 32

3. ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்:—
ஸ்ரீ. உப. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர். 37

4. உபநயநம்:—ஸ்ரீ. உப. வே. காடாங்தேத்தி-கோபாலாசார்யர். 41

5. அபிமானமும் பதுமானமும்:—ஸ்ரீ. உப. வே. ஸ்ரீசைலதாதாசார்யர். 1

6. ஸ்ரீபரமபத ஸோபாநம் (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்ஹமாசார்யர். 73

7. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ்மொழி பெயர்ப்புடன்)—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்ஹமாசார்யர். 169

Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam.

K. R. Press, Madras.

வர்ஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4

உலக ப்ரசித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலை, | ரூ. 3.



ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

ஸ்ரீ. உப எம். ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி பண்டின் உபந்யாஸங்கள்.

ஜனங்களுக்கு ஆஸ்திக்யம் உண்டாகவேண்டுமென்று இந்தஸ்வாமியின் த்ரவ்ய ஸஹாயத்தால் கருர்ப்ராந்தங்களில் உபந்யாஸங்களை நடத்த ஸ்ரீ. உப. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி ஸபையோரால் ப்ரார்த்திக்கப்பட்டு, அந்த ஸ்வாமியும் பின் வருமாறு உபந்யாஸங்களை அந்தந்த ஊரில் குறிப்பிட்ட தேதியில் செய்து வருகிறார். அந்தந்த ஊர்களிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் இன்னும் மற்றஜனங்களும் கேட்டு ஆநந்தித்து தங்களுடைய க்ருதஜ்ஞதையை கடிதம் மூலமாய் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆவணிமீ	7உ 8உ;	மேலப்பாளையம்.	தர்மம், விபீஷண சரணாகதி.
,,	14, 15உ	வாங்கல்	ருக்மிணீ கல்யாணம், ராமாயணம் சரணாகதி சாஸ்திரம்.
புரட்டாசிமீ	21, 26உ	வேலூர்	ருக்மிணீ கலியாணம், வர்ணாச்ரம தர்மம்.
ஐப்பசிமீ	5உ	புலியூர்	ருக்மிணீ கல்யாணம்.
,,	6உ	வாங்கல்	ப்ரஹலாத சரித்திரம்.
,,	22உ	கருப்பன்பாளையம்.	தர்மம், அநுஷ்டானம்.
,,	23உ	நெரூர்	வர்ணாச்ரம தர்மம், பக்தி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 16.] குரோதன ஹூ, கார்த்திகைமீ. [ஸஞ்சிகை 2.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேঽநவத்யா ॥

[ஸ்ரீபாகவதம் - 1-9-23.]

பத்ராதிபரின் குறிப்புகள்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, சேலம்.

இவ்வருஷம் புரட்டாசிமீ 13வ ஸாயங்காலம் 5½-மணிக்கு ஸ்ரீதேசிகன் திருநக்ஷத்ரமாகிய சுபதினத்தில் ஒரு ஸபை கூட்டப்பட்டது. அதற்கு ஸ்ரீ. உப. ஸம்ஸ்க்ருதபண்டிதர் கே. ராமாநுஜாசார்யர் ஸ்வாமி அக்ராஸனம் வஹித்து பின் வரும் விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டு தீர்மானம் செய்யப்பட்டன.

இச்சபையின் ஆதரவின்கீழ் ப்ரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் ஸாயங்காலம் 5-மணிக்கு ஸ்ரீராமாயணம் ஸ்ரீபாகவதம் முதலிய க்ரந்தங்களிலும் இச்சபை விஷயமாய் பிரஸிடெண்டான கே. ராமாநுஜாசார்யரால் உபந்யாஸங்களும் செய்யப்படும். வெளியூரிலிருந்து வித்வான்களை வரவழைத்து ஸ்ரீவைஷ்ணவ ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி உபந்யாஸங்கள் செய்ய ஏற்பாடு செய்யப்படும். விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை விசேஷமாய் பரவச்செய்யவேண்டியது அவச்யமாகையால் எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் ஒன்றாக இருந்து அப்போதைக்கப்போது நடத்தப்படும் கூட்டங்களுக்கு வந்திருந்து ஸபையின் அபிவ்ருத்தியை யோசித்து நடத்தவேண்டியது. ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவர்கள் வீடுகளில் நடக்கும் சுபாசுபகார்யங்களில் இச்சபைக்காக அவர்கள் சக்தியாநுஸாரம் 4-அணாவுக்குக் குறை

186755

யாமல் ஸம்பாவனைகள் செய்யவேண்டுமென்பது இச்சபையின் தீர்மானம். இச்சபையின் மெம்பர்கள் ஒவ்வொரு வீடுகளில் நடக்கும் சுபாசுபகார்யங்களுக்கு மெம்பர்கள் அனைவரும் போய்வரவேண்டும். ஒவ்வொருவரும் வேதாந்த தீபிகையை வரவழிக்க வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, கோயம்புத்தூர்.

சென்ற **1923**ௐ ஆகஸ்டு௴ 26௳ இந்த ஸபை ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வருஷங்களாக பிரதி சனி ஞாயர் தினங்களில் தவறாமல் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யரால் திவ்ய ப்ரபந்த காலக்ஷேபங்கள் செய்யப்பட்டு ஸ்ரீமான் பி. என். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்காரின் அக்ராஸனத்தில் வருஷக்கூட்டம் நடைபெற்றது.

காலையில் ஸ்ரீமான் கன்னுஸாமிக்கவுண்டரால் வருஷாந்த ரிபோர்டு வாசிக்கப்பட்டது. ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ‘அர்ச்சாவதாரம்’ என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினார். பிறகு ஸ்ரீ. உப. வேதவ்யாஸ பட்டாசார்யர் ‘அர்த்த பஞ்சகம்’ என்பதைப்பற்றி ஜீவனை அடைய விரோதியாயிருக்கிற படிகளையும், ஜீவனை அடைவதால் கிடைக்கும் புருஷார்த்தத்தைப்பற்றியும் எடுத்துச்சொன்னார். அதன் பிறகு ஸ்ரீ. உப. வி. ஆர். ஸ்ரீசைல சக்ரவர்த்தி ஆசார்யர் ‘ஈச்வர தத்வம்’ என்ற பொருளுக்குப் பதமும் அர்த்தம் இன்னதென்றும் எடுத்துக்காட்டினார். அதன் பிறகு ஸ்ரீமான் க்ருஷ்ணஸ்வாமி ‘ஸ்ரீவைஷ்ணவ தத்வம்’ இன்னதென்றும், ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை என்றும் எடுத்துக் காட்டினார். பிறகு ஸம்பாவனை செய்து ஸபை கலைந்தது.

மசோதா

கோயம்புத்தூர் ஸ்ரீ. உப. சி. வி. வெங்கட்ரமண அய்யங்கார் ஸ்வாமி ஏற்கனவே ஹிந்துமதஸ்தாபன மசோதாவில் மடங்களையும் சில கோவில்களையும் சேர்க்கக்கூடாதென்று ஒரு தீர்மானம் கோண்டுவர வைஸிராயை உத்திரவு கேட்டு, அவரும் அவ்விதமே ஆகட்டுமென்று சொல்லி ஸமீபத்தில் கொண்டுவரப்போகிறதாகத் தெரியவருகிறது.

ஸம்பாவனை.

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ. உப. ரகுநாதாசார்யர் தன்னுடைய தம்பியின் குழந்தைக்கு வாசிக்க வைக்குமுன் அவ்வூர் ஸபைக்கும் நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபைக்கும் ஸம்பாவனை செய்தார். அதை இவ்விடம் நமக்கு அனுப்பிவிட்டார். இவ்விதம் ஸம்பாவனை செய்வது நம்முடைய ஸபையின் ஆதரவின்கீழ் நடைபெறவேண்டியதே தவிர வேறு

எவ்விதமாகவும் செய்வது அவ்வளவு யுக்தமாகாது. ஏற்கனவே பகவான் முதல் தன் ஆசார்யன்வரையில் ஸம்பாவனை செய்துவிட்டு நம்முடைய ஸம்ப்ரதாயம் வ்ருத்தியடைய வேண்டுமென்று ஸம்பாவனை செய்வது நலம். இதில்லாமல் வேறு மற்ற விஷயங்களில் ஸம்பாவனை செய்வது அவ்வளவு யுக்தமாகாது. இதை அவரவர்கள் திருவுள்ளம் பற்றுவாராக.

ஓர் அவதரணம்

மதுராந்தகத்தில் ஸம்ஸ்க்ருதஸ்கூல் உபாத்தியாயராகயிருந்து அநேகம் பேர்களுக்கு வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டிருந்த கெருடபுரம் ஸ்ரீ. உப. ராஜகோபாலாசார்யர், சென்ற ஆவணி௴ 23௳ ஸந்யஸித்து இப்போது திருவஹீந்திரபுரத்தில் எழுந்தருளியிருக்கிறார். இவருடைய இப்போது திருநாமம் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன். அநேகம் பேர்கள் தத்காலம் திருவஹீந்திரபுரத்துக்கு எழுந்தருளி ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் காலக்ஷேபம் செய்துவருகிறார்கள். இவர்கள் செய்யும் கைங்கர்யம் இவ்வளவு என்று சொல்லிமுடியாது.

அந்திம ஸ்ம்ருதி.

இதிஹாஸ புராணங்களிலிருக்கும் பெரிய மனிதர்களுடையவும் பெரிய ரிஷிகளுடைய கதைகளை எடுத்துச் சொல்லுங்கால் ஒவ்வொன்றிலும் மனிதனுடைய முன்னேற்றத்துக்குக் காரணமான விஷயங்கள் இருக்கின்றன. இந்தக் கதைகளில் மனிதனுடைய முன் ஏற்றத்துக்கு எடுக்கக்கூடிய விஷயங்கள் கொஞ்சமிருக்கின்றன. நாம் எடுத்துச் சொல்லும் கதையில் ‘𑌅𑌨𑍍𑌤𑍇 𑌮𑌤𑌿𑌃 𑌸𑌾 𑌗𑌤𑌿𑌃’ என்பதில் ஒருவன் அடுத்த ஜன்மத்தில் எதை அடைவானோ அதையே சொன்னதாக ஆகும். ஒவ்வொரு மனிதனுக்கும் ஸரியானபடி கடைசி ப்ரஜ்ஞை இருக்கவேண்டும். இதற்காக இவன் ஒவ்வொரு நாளும் நல்ல கார்யங்களையே செய்துகொண்டிருக்கவேண்டும். நாம் வரவர பக்திஉள்ளவர்களாகவும் ஆஸ்தை உள்ளவர்களாகவுமிருக்க நாம் நல்ல கார்யங்களைச்செய்து வரவேண்டும். பக்தி செய்யாவிட்டால் நமக்கு நல்லது தோன்றாமல் கெட்ட கார்யத்திலேயே போய் இழிந்துவிடுவோம். நாம் நம் குழந்தைகளுக்கு பகவானுடைய பெயரை வைப்பதானது அவரை கூப்பிடுவதுதான் என்கிற அர்த்தத்துக்கு ஆகவேதான். ஆகையால் தான்,

𑌕𑍃𑌷𑍍𑌣 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯 𑌪𑌦𑌪𑌙𑍍𑌕𑌜 𑌪𑌞𑍍𑌜𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑍍
𑌅𑌦𑍍𑌯𑍈𑌵 𑌮𑍇 𑌵𑌿𑌶𑌤𑍁 𑌮𑌾𑌨𑌸 𑌰𑌾𑌜𑌹𑌂𑌸𑌃 ।
𑌪𑍍𑌰𑌾𑌣 𑌪𑍍𑌰𑌯𑌾𑌣 𑌸𑌮𑌯𑍇 𑌕𑌫𑌵𑌾𑌤𑌪𑌿𑌤𑍍𑌤𑍈𑌃
𑌕𑌣𑍍𑌠𑌾𑌵𑌰𑍋𑌧𑌨 𑌵𑌿𑌧𑍌 𑌸𑍍𑌮𑌰𑌣𑌂 𑌕𑍁𑌤𑌸𑍍𑌤𑍇 ॥

ஹே க்ருஷ்ண ! என்னுடைய மானஸ ராஜஹம்ஸமானது இப்போதே போய் உன் திருவடிகளை சரணமடையட்டும். கபவாத பித்தத்தால் ப்ராணனானது ப்ரயாண ஸமயத்திலிருக்கும்போது என்னுடைய ஜ்ஞாபகமானது கண்டத்திலிருக்கும்போது உன்னைப்பற்றி ஸ்மரணம் ஏது ?

இவ்விதம் இருந்துகொண்டிருக்கையில் ஒருநாள் ஒருவனுக்கு பகவானை தன்னால் ஆனவரை ஸ்தோத்ரம் செய்து அவரையே நல்ல கார்யங்களில் தன்னை ப்ரயத்னம் செய்யும்படி செய்ப ஏற்பாடு செய்து வந்தான்.

இவன் பகவானுக்கு ப்ரீதி உண்டாக்கவேண்டுமென்று எண்ணி இருந்தான். வெகுநாள் ஆனபிறகு அவனுக்கு காசிக்குப் போகவேண்டுமென்று தோன்றிற்று. அப்படியே போய்க் கொண்டிருக்கையில் இவன் ஒரு பறச்சேரி வழியாகப் போகிற ஸமயத்தில் இவனுக்கு மரணம் நேர்ந்தது. உடனே பறையனாகப் பிறந்தான். இவன் பறையனாகப் பிறந்தாலும் அவர்களுக்கிருந்த விதமாய் கூற்றுகள் முதலிய விதங்களில் இவன் தான் ஒன்றும் ஸம்பந்தப்படவில்லை. ஒரு நாள் இவனுடைய தகப்பன் குடும்பத்தாருடன் இவனைவிட்டு விட்டு ஊருக்குப்போகத் தலைப்பட்டான். தன்னுடைய கடமையை விட்டு விட்டுப்போக தன்னால் முடியவில்லை. இருந்தாலும் இவனை வைத்து விட்டுப்போகலாம் என்று நினைத்தான். இவன் ராத்திரி ஊர் முழுவதையும் சுற்றி ஒவ்வொரு ஜாமத்துக்கு முடிவிலும் ஒரு சேமக்கலத்தை தட்டிக்கொண்டு போகவேண்டுமென்று கட்டளை. அவ்விதமே இவன் முதல் ஜாமத்தில் பின்வரும் ச்லோகத்தைச் சொல்லிக்கொண்டே போனான்.

> ஆசயா பத்யதே லோக: கர்மணா பஹுசிந்தயா ।
> ஆயு: க்ஷீணம் ந ஜாநாதி தஸ்மாஜ் ஜாக்ரத ஜாக்ரத ॥

(லோகமானது ஆசையாலும், கர்மங்களினாலும், அநேக விதமான சிந்தையாலும் போக்கப்படுகிறது, ஆயுஸ்ஸின் க்ஷீணத்தை அறியவில்லை, ஆகையால் விழித்துக்கொள்) ஆசையாலும் விருப்பத்தாலும் அடையமுடியாமல் என்னயிருக்கிறது. ஒரு கார்யத்தை அடைய விரும்பும்பொழுது அதை அடையும் வரையிலும் எவ்விதமான உபாயமும் உபயோகிக்கிறோம் என்று பாராமல் எவ்விதமாவது அதை அடைய விரும்புகிறோம். இதுபோலவே ஏதானும் ஒரு தோற்றம் அல்லது இன்னொரு தோற்றம் மாறி வருகிறது. கடைசியில் இந்த ஜன்மத்தினால் உண்டான ஸௌகர்யாஸௌகர்யத்தை கவனிக்காமல் என்ன செய்தோம் என்று திடுக்கிட்டு நிற்கிறோம்.

இரண்டாவது ஜாமத்தில்,

> காமச் க்ரோதச்ச லோபச்ச தேஹே திஷ்டந்தி தஸ்கரா: ।
> ஜ்ஞாநரத்நாபஹாராய தஸ்மாஜ் ஜாக்ரத ஜாக்ரத ॥

(காமம், கோபம், மோஹம் இம்மூன்றும் நம்முடைய ஜ்ஞானத்தை எடுக்க திருடர்கள்போல் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆகையால் ஜாக்ரதை) நம்மிடமிருந்து பிறப்பது நமக்கு சத்ருவாக இருக்கின்றன. இந்திரியங்களுக்கு பரவசர்களாய், உலகத்தில் ஸுகம் என்று சொல்லப்பட்ட ஸுகலேசங்களை பெரிதாக நினைத்துக்கொண்டு வரவர கீழே போய்க்கொண்டிருப்பது தெரியாமல் ஒவ்வொரு நாளும் நாம் கீழே போய்க்கொண்டிருக்கவில்லையா? இவ்விதம் செய்வதால் தனக்குக் கஷ்டத்தைக் கொண்டுவந்துகொள்ளாமல் கூட இருக்கும் மற்றவர்களுக்கும் துக்கத்தை உண்டாக்கிவிடுகிறோம். புராணங்களைப் பார்த்தால் இதற்கு வேண்டிய விஷயங்கள் நமக்கு எவ்வளவும் அகப்படுகிறது பார்ப்போம். தண்டக்யன், ஜனமேஜயர், ஐலர், தம்போத்பவன், மஹாபராக்ரமசாலியான ராவணன், இன்னும் இவர்களைப் போல தானும் கெட்டு இன்னும் கூட இருக்கிறவர்களையும் கீழே தள்ளி நாசமாகும்படி செய்தார்களல்லவா. இவர்களால் உலகத்துக்குள்ள ஸாதகம் என்ன இருக்கிறது ?

மூன்றாவது ஜாமத்தில் இந்த ச்லோகத்தை சொல்லிக்கொண்டுபோனான்.

> மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து: ஸஹோதர: ।
> அர்த்தம் நாஸ்தி க்ருஹம் நாஸ்தி தஸ்மாஜ் ஜாக்ரத ஜாக்ரத ॥

(உனக்கு தாயுமில்லை தகப்பனுமில்லை பந்துவுமில்லை ஸிநேகிதருமில்லை. அர்த்தமும் க்ருஹமும் இல்லை ஆகையால் விழித்துக்கொள்.)

ஒருவன் தன்னுடைய ஆத்மஸ்வரூபம் தெரிந்து அதன் பிரகாரம் பகவானுக்கு இது ப்ரியம் இது அப்ரியம் என்று தெரிந்து நடக்கிறவனுக்கு உலகத்தில் தாய்தகப்பன் என்று ஒருவருமில்லை. ஸகலகோடி சராசரங்களும் எல்லாம் அவரைச்சேர்ந்தது என்று எண்ணங்கொண்டு எல்லா வஸ்துவினிடமும் பூர்ணவிச்வாஸத்துடன் ராகத்வேஷமில்லாமல்நடந்துகொள்ளுவான். எதற்கு என்ன செய்தாலும் பகவானால் ஏற்படுத்தப்பட்டபடியால் அவருக்கு மிகவும் திருவுள்ளமாகயிருக்கும்.

நான்காவது ஜாமத்தில் பின்வரும் ச்லோகத்தைச் சொல்லிக் கொண்டு போனான்.

> ஜந்ம து:கம் ஜரா து:கம் ஜாயா து:கம் புந: புந: ।
> ஸம்ஸார ஸாகரம் து:கம் தஸ்மாஜ் ஜாக்ரத ஜாக்ரத ॥

(இந்த உலகத்தில் ஜனனம் எடுப்பது துக்கம், வயஸு இன்னும் துக்கம், பெண்டீர்களை கல்யாணம் பண்ணிக்கொள்ளுவது இன்னும் துக்கம், ஸம்ஸாரமானது துக்கஸாகரமாக இருக்கிறது. ஆகையால் விழித்துக்கொள்.)

நாம் குழந்தையாய்ப் பிறந்து பெரியவனாக ஆகி உலகமாகிற ரங்கத்தில் நாட்டியமாடுவதில் துக்கமும் ஆரோக்யமும் விஞ்சுகிறதே தவிர வேறு எவ்வித விசேஷமும் இல்லை. எப்போதும் பிறப்பு இறப்பு என்ற இந்த இரண்டும் இவனை புண்படுத்துகின்றன. இவனுக்கு என்னசெய்கிறதென்று புரியவில்லை.

இந்த ச்லோகங்களை அவ்வூர் ராஜா கேட்டு விழித்துக்கொண்டு உறங்காமல் இந்த ச்லோகங்களின் ஸாராம்சத்தை அறிந்துகொண்டிருந்தான். அடுத்த நாள் தன்னுடைய ஆஸ்தானத்தில் உட்கார்ந்து தன்னுடைய அரண்மனைக்கு இந்தப் பறையனை அழைத்து வரச்சொன்னார். இவர் வரச்சொன்னது எதற்கோ என்று வியஸனமுற்று அந்தப் பையனுடைய தாயும் தகப்பனும் கூட இவனை அழைத்து வந்தார்கள். ராஜா எழுந்திருந்து இவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்து இவன் வந்ததும் எழுந்திருந்து இவன் சொன்ன ஒவ்வொரு ச்லோகத்தின் அர்த்தத்தை தெளிய எடுத்துச் சொல்லி அவனுக்கு என்னவேண்டுமென்று கேட்டான். அவன் தனக்கு தூக்குப்போடுமிடம் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டதினால் அதை அவனுக்குக் கொடுத்துவிட்டான். இவ்விதம் ராஜாசெய்தது இவன்கொலைக்களத்திற்குப்போய் அந்த சுவரில் தசாவதாரத்தினுடைய கதைகளை எழுதி வைத்து கொல்லப்பட வரும் ஒவ்வொருவனுக்கும் அவை எல்லாவற்றையும் காண்பிவித்து உடனே கழுத்தில் கத்தி விழும்படி செய்து வந்தான். இவ்விதம் செய்துவந்ததால் திருடர்களும் இன்னும் துச்சரிதம் பண்ணுகிறவர்களும் தங்களுடைய அந்திம தசையில் நல்ல காக்ஷிகளைக் கண்டதினாலே அவற்றையே கடைசிவரையிலும் நினைத்துக்கொண்டிருந்தபடியினால் 'யாஜெ ஃதிஃ ஸா ஶதிஃ' என்று அந்த ஜன்மத்தைக் காட்டிலும் நல்ல கதியை அடையும்படி செய்து வந்தான்.

தான் எவ்விதமாகப் பிறந்தாலும் நல்ல கதியை அடையவேண்டுமென்று விருப்பமுள்ளவர்கள் இருவிதமாக அடையலாம் அதாவது பக்தி யோகத்தாலும், ப்ரபத்தியாலும். பக்தி யோகத்தில்,

யம் யம் வாவி ஸ்மரந் ஹாவம் த்யஜத்யெ கலெவரம் ।
தம் தமெவெதி கௌந்தெய ஸதா தத்ஹாவஹாவிதஃ ॥

(யாதொரு சேதனன் தன் அந்திமகாலத்தில் எங்தெந்த விஷயத்தை நினைத்துக்கொண்டு சரீரத்தை விடுகிறானோ அதே விஷயத்தை அடுத்த ஜன்மத்தில் அடைகிறான்) ஆகையால் ஸர்வகாலத்திலும் என்னையே அநுஸ்மரணம் செய்துவந்தால் அந்த அனுபவம் தன்னடைவே அந்திமகாலத்தில் வரும் என்பதாம். இது மிகவும் ஸாத்யமில்லை. நாம் இங்கே நினைக்க ஆரம்பிக்கும்போது மனது எங்கேயோ நம்மை இழுத்துக் கொண்டுபோகும்.

ப்ரபன்னனுக்கோவெனில் அவ்விதமில்லை. பகவான் இவனுக்கு அந்திமஸ்ம்ருதியை உண்டுபண்ணி அர்ச்சிராதிகதியில் புகும்படி செய்கிறான். இதனால்தான் பேரருளாளப்பெருமாள் திருக்கச்சிநம்பியுடன் பேசினபோது ஸ்ரீபாஷ்யகாரருக்கு அந்திமஸ்ம்ருதி வேண்டாமென்று சொல்லச்சொன்னது தன்னுடைய ப்ரபாவத்தினால் இல்லை என்றும் ப்ரபன்னனுடைய பெருமையை எடுத்துச் சொன்னதற்காகவேயன்று வேறல்ல.

மஹாளய ச்ராத்த நிரூபணம்.

ஸூர்யன் எப்போது கன்யாராசியை அடைகிறானோ அந்த புரட்டாசியீ க்ருஷ்ண பக்ஷத்திற்கு மஹாளயபக்ஷம் என்று பெயர். இந்த பதினைந்து தினத்திலும் பார்வண விதியினாலே அப்போது ச்ராத்தம் செய்யவேண்டும். அதில் ப்ரதமை தினம் செய்தால் தனலாபம், துவிதீயையில் செய்தால் புத்ரலாபம். வேண்டியவரன், சத்ருநாசம், ஐச்வர்யம், எல்லோராலும் பூஜ்யதை, அநேகர்களுக்கு எஜமானத்வம், நல்ல புத்தி, நல்ல ஸ்திரீகள், எல்லா ஆசையின் பூர்த்தி, வேதங்களின் ப்ராப்தி, ஸ்வர்ணலாபம், இவை ஒவ்வொன்றும் த்வாதசி வரையிலும், பிறகு த்ரயோதசியில் புத்தி, பசுக்கள், தேஹபுஷ்டி, தானே யஜமானனாயிருத்தல், உயர்ந்ததான வ்ருத்தி, தீர்க்காயுசு, அநேகருக்கு அரசனாயிருத்தல், இவைகளின் ப்ராப்தி எல்லாம் கிடைக்கின்றன. எவனுடைய பித்ருக்கள் தங்கள் யௌவன காலத்திலேயே ஆயுதத்தினால் மரணமடைந்தார்களோ அவர்களுக்கு நன்மையைத்தேடி சதுர்தசியில் சிராத்தம் செய்யவேண்டும். அமாவாஸ்யையில் செய்தால் எல்லா ஆசைகளையும் அடைந்து நாசமில்லாத ஸ்வர்கத்தை அடைகிறான்.

ஸூர்யன் ஹஸ்த நக்ஷத்ரத்திலிருப்பதால் ப்ரேதராஜாவின் ஆஜ்ஞையால் வ்ருச்சிகமாதம் துவக்கமாகும் காலம்வரை ப்ரேதபுரி சூன்யமாகயிருக்கிறது. வருஷருதுவில் யமன் தன்னுடைய பட்டணத்திலிருந்து ப்ரேதங்களையும் பித்ருக்களையும் மனுஷ்யலோகத்துக்கு அனுப்பி தன் பட்டணத்தைச் சூன்யமாகச் செய்கிறான். அந்த ப்ரேதங்களும் பித்ருக்களும் பசியினால் வருந்தித் தங்களால் செய்யப்பட்ட பாபத்தை நினைத்துக்கொண்டும், தங்களுடைய பிள்ளைகள், பிள்ளைகளின் பிள்ளைகளிடமிருந்து தேன் கலந்த பாயஸத்தை இச்சித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால்

அவர்களை அந்தக் காலத்தில் விதிப்படி தேன் நெய் திலம் இவைகளுடன் சேர்ந்த பாயஸத்தினாலும் குளிர்ந்த ஜலத்தினாலும் திருப்திசெய்து வைக்கவேண்டும். பிறர் வீட்டிலிருந்து எந்த மனிதன் ஒருபிடி அன்னமாவது அடைகிறானோ, அல்லது எவன் தன் தேஹத்தை விற்று தன் தேஹத்தை வளர்த்துவருகிறானோ, அவனும் அப்படியே தன்னால் ஸம்பாதிக்கப்பட்ட த்ரவ்யத்தினால் சிராத்தம் செய்யவேண்டும்.

இதை சதுர்தசி, நந்தை அதாவது ப்ரதமை, ஷஷ்டி, ஏகாதசி, வெள்ளிக்கிழமை, ரோஹிணி, த்ரிஜன்மம், ரேவதி, மகம் முதலான தினங்களில் செய்யலாகாது. பஞ்சமி முதல் ச்லாக்யம். தகப்பன் ஸங்யஸித்துவிட்டால் பிள்ளை த்வாதசியில் ச்ராத்தத்தை செய்யவேண்டும். பஞ்சமி முதல் அமாவாஸ்யைவரை செய்ய முடியாவிட்டாலும் அதற்கடுத்த பஞ்சமிவரையில் செய்யமுடியாவிட்டாலும் கன்னியாராசியில் ஸூர்யனிருக்கிறவரையில் ச்ராத்தம் செய்யவேண்டும். அதிலும் செய்யாவிட்டால் கார்த்திகைமீ பிறப்பதற்குமுன் செய்யவேண்டும். அதிலும் செய்யாவிட்டால் தீபாவளி அமாவாஸ்யையிலாவது செய்யவேண்டும்.

இந்த ஸமயத்தில் செய்யமுடியாவிட்டால் அடுத்த ஐப்பசிமீ அமாவாஸ்யைக்குள் செய்யவேண்டும். அப்படியும் செய்யாவிட்டால் ஸூர்யன் வ்ருச்சிக ராசியை அடைந்துவிட்டால் பித்ருக்கள் மனோதுக்கத்தை அடைந்து ஆசையற்றவர்களாய் தங்களுடைய லோகம் போய்ச்சேருகிறார்கள்.

இந்த மஹாளயபக்ஷத்தில் வரும் பரணிக்கு மஹாபரணி என்று பெயர். இதில் வரும் த்ரயோதசிக்கு கஜச்சாயை என்றும், மத்யாஷ்டமிக்கு கயை என்றும், இவைகளில் செய்யப்படும் ச்ராத்தத்தை கயையில் செய்யப்படும் ச்ராத்தத்துக்கு ஸமமாய் மஹர்ஷிகள் கூறுகிறார்கள்.

தத்காலம் ச்ராத்தமாகச் செய்யாமல் ஹிரண்ய ச்ராத்தமாகச் செய்கிறார்கள். அதற்கு அங்கமாக தர்ப்பணத்தைச் செய்கிறோம். இதெல்லாம் ப்ரபன்னனுக்கு உரித்தல்ல. இவன் ஒவ்வொன்றையும், '[illegible]' என்று சொல்லுவதுபோல் எல்லாவற்றையும் பகவத் ப்ரீதியாகச் செய்கிறான்.

வேங்கடாத்வரீ.

(ஸ்ரீ. உப. எம். க்ருஷ்ணமாசார்யர், எம். ஏ., எம். எல்.)

விச்வகுணாதர்சம் எழுதி ப்ரஸித்திபெற்ற இந்த வித்வான் ஆத்ரேய கோத்ரத்தில் ரகுநாதன் என்பருக்கும் ஸீதாம்பாள் என்பவளுக்கும் பிறந்தவர். இவருடைய பாட்டனார் காஞ்சீபுரத்தில் ப்ரஸித்திபெற்றிருந்த அப்பயதீக்ஷிதருக்கு ஸமகாலீனரான பஞ்சமதபஞ்ஜனம் தாதாசார்யர் என்பவரின் மருமகன். அவர் பெயர் ஸ்ரீநிவாஸாசார்யர், அப்பயகுரு என்றும் சொல்லுவதுண்டு. ஸ்ரீபாஷ்யகாரரின் சிஷ்யரில் ஒருவரான ப்ரணதார்த்திஹரர் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுடைய ஆசார்யரான வாதிஹம்ஸாம்புவாஹாசார்யரின் திருவம்சத்தில் அவதரித்தவர். இவர் அரசாணிப்பாலை என்னும் கிராமத்தில் பிறந்து காஞ்சீபுரத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்தார். பதினேழாவது நூற்றாண்டின் பின்பாகத்தில் நீலகண்டதீக்ஷிதருடைய ஸமகாலீனராய் எல்லா சாஸ்திரங்களில் பாரங்கதராகவிருந்தார். அவருடைய வைதுஷ்யம் அநேக க்ரந்தங்களிலிருந்து வ்யக்தமாகும். இவருக்கு கவனத்தில் அஸாதாரண பாண்டித்யம். ப்ரளயகாவேரி என்னும் ஸதஸ்ஸில் ஆஸ்தான வித்வானாக இருந்தார்.

அவருடைய காலத்தில் இந்த தேசத்தின் ஸ்திதியை வர்ணிக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு க்ருசானு விச்வாவஸு என்னும் இரண்டு கந்தர்வர்களுக்குள் ஸம்பாஷணரூபமாய் விச்வகுணாதர்சம் என்ற ஒரு சம்புவை எழுதினார். இந்த இரண்டு கந்தர்வர்களும் ரதத்தில் ஏறிக்கொண்டு ஆகாசமார்க்கமாய் போய்க்கொண்டிருக்கும்பொழுது ஒவ்வொரு தேசவிசேஷத்தின் ஸ்வபாவ விசேஷங்களைச் சொல்லிக்கொண்டே போகிறார்கள். விச்வாவஸு குணத்தையே எடுத்துச்சொல்லி வருகிறான். க்ருசானு தோஷத்தையே சொல்லிவருகிறான். இவன் கண்ணில் குணமேபடாது. அந்தக்காலத்தில் ஜனங்களுடைய ஆசாரம் நடவடிக்கைகளின் தோஷத்தை எடுத்துக்காட்டுவதற்காகவே எழுதினார். இவ்விதம் இவர் திவ்ய தேசத்தை நிந்தித்ததால் அவர் பொட்டையாகப் போய்விட்டார் என்றும், பிறகு லக்ஷ்மீ ஸஹஸ்ரம் ஸ்ரீநிவாஸ ஸஹஸ்ரம் என்று பரமாத்மாபேரிலும் ஸ்ரீலக்ஷ்மீபேரிலும் ஆயிரம் ச்லோகங்கள் ஸ்தோத்ரம் செய்ததினால் அவருக்கு மறுபடி பார்வை உண்டாயிற்று என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இந்த விஷயம் தப்பு என்று அவர் வம்சத்தார்கள் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு ஸ்தோத்ரங்களும் ப்ராஸத்தாலும் கல்பனைகளிலும் மிகவும் அலங்காரமானவை. இவர் வார்த்தை சொல்லும்போதே ப்ராஸமாகத்தான் பேசுவதாகக் கேள்வி. தன்னுடைய இருபத்தைந்து வயதுடைய குமாரன் காலாந்தரமானவுடன் துக்கம் விசாரிக்க வந்தவர்களிடம் தன்னுடைய குமாரன் இருந்தும் நிர்வாஹகனாக இருந்தான், போயும் நிர்வாஹகனாக இருக்கிறான் என்றாராம். வந்தவர்கள் இந்த ஸமயத்தில் கூட ப்ராஸம் ஏன், என்றதற்கு, ச்வாஸம் போனாலும் ப்ராஸம் போகாது என்று சொன்னாராம்.

இவருடைய க்ரந்தமாவன:—

யாதவ ராகவீயம்:— இதில் ஸாதாரணமாய் ச்லோகத்தை வாசித்தால் ஸ்ரீராமனுடைய கதையாகயிருக்கும். ச்லோகத்தைத் திருப்பி வாசித்தால் க்ருஷ்ணனுடைய கதையாகவிருக்கும்.

உத்தர சம்பு:— இதில் ஸீதையை காட்டுக்கு அனுப்பி குசன் லவன் பிறந்தது வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இது போஜசம்புவுக்கு உத்தர காண்டமாக ஏற்பட்டது.

ஹஸ்திகிரி சம்பு:— காஞ்சீபுரத்தில் தேவராஜப்பெருமாளின் பெருமையும் வைபவமும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

ஆசார்ய பஞ்சாசத்:— ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய பெருமை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ச்ராவணாநந்தம்:— பற்பல விஷயங்களைப்பற்றி அழகான ச்லோகங்கள் அடங்கியது. இவருடைய கவிதா ஸாமர்த்தியம் காட்டப்பட்டிருக்கிறது.

ஸுபாஷிதகௌஸ்துபம்:— அஜ்ஞானம், பாபம், புண்யம் இவைகளின் ஸ்வபாவஸ்வரூபங்கள் விசதமாக ஐந்து அத்யாயங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

ப்ரத்யும்நாநந்தீயம்:— சம்பராஸுரனுடைய பெண் ரதிக்கும் ப்ரத்யும்னனுக்கும் கல்யாணம் ஒரு அங்கத்தில் ஒரு நாடகமாக எழுதப்பட்டிருக்கிறது.

ச்ருங்காரதீபிகை:— ஒரு பாணம்.

ஸுபத்ரா பரிணயம்:— இரண்டு அங்கமுள்ள ஒரு நாடகம்.

யதிப்ரதிவந்தனகண்டனம்:— ஸந்யாஸிகள் க்ரஹஸ்தர்களை திரும்பி ஸேவிக்கிறதை கண்டித்திருக்கிறார்.

ஸ்திதித்ரயபராயணம்:— நித்யம், அபூர்வ, பரிஸங்க்யா இவற்றின் ஸ்வரூப ஸ்வபாவம் விசதமாக எழுதப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்வாமி டில்லிக்குப்போய் நவாப்பை பேட்டி காணப் போயிருந்தார். அப்பொழுது நவாப்பு இவருடைய வைதுஷ்யத்தை மெச்சி இவரை தன்மீது ஒரு பாரதம் எழுதும்படி சொன்னான். இவர் ஆகட்டுமென்று ஜாகைக்குவந்து ஆறுமாஸகாலம் பேசாமலிருந்தார். அரண்மனையிலிருந்து ஆட்கள் முடிந்ததா என்று கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். ஆறுமாஸகாலமானவுடன் நவாப்பு கோபத்துடன் இவரை க்ரந்தத்துடன் அழைத்துவரும்படி சொல்லியிருந்தான். இப்படியே வேலைக்காரர்கள் இவரை அழைத்துப்போக வந்தார்கள். இவர் இதற்குள் வெறும் ஓலையை

சீவிச்சீவி ஐந்தாறு சுருணையாக செய்துவைத்திருந்தார். நவாப்பின் வேலைக்காரர்கள் வந்தவுடன் இச்சுருணைகளை தூக்கிக்கொள்ளச் சொல்லி தானும் கூடவே அரண்மனைக்குப்போனார். நவாப்பு இவரைப் பார்த்துவிட்டு பாரதம் முடிந்துவிட்டதா என்று கேட்க. அதற்கு இவர் முடிந்துவிட்டது, ஆனால் ஒரு கேள்வி, எழுதுவதற்கு இடம் விட்டிருக்கிறேன். அதை நவாப்பைக்கேட்டு எழுதவேண்டுமென்றிருக்கிறேன் என்றார். நவாப்பு என்னவென்று கேட்டான். அதற்கு பாரதத்தில் த்ரௌபதிக்கு ஐந்து பர்த்தாக்கள் என்று எழுதியிருக்கிறது, தங்களுடைய பாய்ஸாயபுக்கு ஐந்து பர்த்தாக்கள் வேண்டுமே, அதில் தாங்கள் ஒன்று, மற்றவர் நாலு யார் என்று கேட்டார். இவர் கேட்டதும் நவாபுக்கு அடங்காத கோபம் கொண்டு வேலைக்காரர்களைக்கொண்டு ஓலைச்சுருள்களை கிழித்துவிடும்படி கட்டளையிட்டான். இவருக்கும் மஹாபாரதம் எழுத வேண்டாமென்றும் யதேஷ்டமான த்ரவ்யத்தைக்கொடுத்து அனுப்பினான் என்று பெரியோர்கள் சொல்லுவதுண்டு.

இவர் டில்லியிலிருக்கும்போது இவருக்கு ஒரு கொழுக்கட்டையில் பவுனைவைத்து நவாப்பு அனுப்பி இருந்தார். அது வந்தவுடன் 'ശാകായ വാ സ്യാത് ലവണായ വാ സ്യാത്' என்று சொன்னதுண்டு. கொழுக்கட்டையைக்கொண்டு காய்கறிகளாவது உப்பாவது வாங்குவதற்கு உபயோகமாகும் என்று சொன்னார். இதைக்கேட்டதும் அந்தவார்த்தையை நவாப்பிடம் கொழுக்கட்டை கொண்டுவந்தவன் போய்ச்சொல்லிவிட்டான். மறுநாள் நவாப் என்ன ஸங்கதியென்று கேட்டதும் அப்போது இவர் நான் அவ்விதம் சொல்லவில்லையே, நான் சொன்னது இதுதானே என்றுசொன்னார்.

ഡില്ലീശ്വരോ വാ ജഗദീശ്വരോ വാ മനോരഥാൻ പൂരയിതും സമർത്ഥഃ।
അന്യൈർനൃപാലൈഃ പരിദീയമാനം ശാകായവാസ്യാത് ലവണായവാസ്യാത്॥

(டில்லீச்வரனோ பகவானோ மனதின் பரிபூர்த்தியை அடையச்செய்யக்கூடியவர்கள். வெகுமதி வேறெந்த ராஜாவாலேயும் கொடுக்கப்பட்டது காய்கறிகளுக்காவது உப்புக்காவது ஆகும்) என்று அல்லவோ என்று சொன்னதும் யதேஷ்டமாக த்ரவ்யத்தைக்கொடுத்து திருப்பி அனுப்பிவிட்டார்.

இவரைப்பற்றி இன்னொரு கதை சொல்லுவதுண்டு. ஒரு கொடிய பஞ்சத்தில் கையிலிருந்த அமுத்திரி செலவழிந்துபோய் என்ன செய்கிறது என்று இவருக்குஎழுதினதற்கு, இவர்இந்தச்லோகத்தை எழுதியனுப்பினார்.

ശ്വശ്രൂസ്നുഷാഭാവമവേ വസതി നൂനം ശോചതേ।
ശ്വശ്രൂസ്നുഷാഭവേഽപി സ്യാത് വായിവാനുഭവോ യദി॥

யாருக்கும் அர்த்தமாகிறது பகவானுடைய ஸேவை இல்லாமல் இவ்விடம் இருக்கமுடியவில்லை. ராஜாவினுடைய உத்திரவு இருந்தால் பகவானுடைய ஸேவையுண்டாகும் என்று. ஆனால் இதல்ல. ஈச்வரவருஷத்துக்கு அடுத்த வருஷம் பஹுதான்யவருஷம். தான்யமில்லாமல் எப்படி ஸாப்பிடுகிறது என்று கேட்டதற்கு பார்த்திவ வருஷத்துக்கு அடுத்த வருஷம் வ்யய என்பதை வைத்துக்கொண்டு, இவர் கீழே புதைத்து வைத்திருந்ததை செலவழித்தால் நம்முடைய காலம் கடக்குமென்று பதில் எழுதி அனுப்பினாரென்று.

இவரைப்பற்றி இன்னொரு கதையுண்டு. அதாவது இவரை வச்யவாக் என்று சொல்லுவதுண்டு. அதற்கு பின்வரும் ச்லோகங்கள் அவர்செய்ததாகச் சொல்லுகிறார்கள்.

[illegible]
[illegible]

கச்சாலசெட்டி என்று ஒரு பெரிய வைச்யர் இந்த சென்னையில் ஒரு தெப்பக்குளம் கட்டினார். அதை ப்ரதிஷ்டை பண்ணுவதற்காக இவரைக்கொண்டு ஏற்பாடுசெய்யும்படியாக வேண்டிக்கொண்டான். அந்தச்செட்டியார் மிகவும் தர்மமில்லாத வழிகளில் செலவுசெய்து வந்தான். அதற்கு இவர் கச்சாலசெட்டியாரால் வெட்டப்பட்ட இந்தஜலம் ஸாப்பிடத்தகுந்ததா இல்லையா என்று கேட்டுக்கொண்டு ஜலம் கடுவாகியிருப்பதால் முதல் சொன்னதும் இல்லை, இரண்டாவது சொன்னதும் இல்லை. ஏன் என்றால் இந்த ஜலம் அமேத்யத்தைவிட நாறும் என்று சொன்னதால் அந்த குளம் முழுவதும் நாறிப்போய் தூர்த்துவிட்டார்கள் என்று முடிவு.

[illegible]
[illegible]
[illegible]

காஞ்சிபுரத்தில் யதோக்தகாரி ஸந்நிதியில் ஸ்ரீதேசிகனுடைய பத்யத்தை சொல்லக்கூடாது என்று ஒருபிரபு எல்லாரிடமும் கையெழுத்துவாங்கிவந்தாலும். இவரை நிர்பந்தித்ததும் இதுதெரிந்து இவர் இந்தச் சுலோ பண்ணினார். அவன் ஒரு பல்லக்கில் ஏறிக்கொண்டு சென்னைபட்டணத்துக்கு வரும்போது நடுவில் தாஹமாக இருந்ததால் ஒருகுளத்தில் இறங்கச் சொன்னான். அவ்விதமே அந்தகுளத்தில்போய் தீர்த்தம் ஸாப்பிடப்போகும் பொது ஏதோ கொஞ்சம் மேகம்வந்து இடிஇடித்து இவன் தலையில் விழுந்ததாம். ஆகையால் இவரை வச்யவாக் என்றும் சொல்லுவதுண்டு.

(இவ்விதம் இந்தவருஷம் அநேகவித்வான்களின் கதைகளை எழுதுவதாகஉத்தேசம் இதைப்போல் இன்னும் ஏதாவது தெரிந்தால் அதை பத்ராதிபருக்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்.

(ஸ்ரீ. உப. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.)

(முன்தொடர்ச்சி).

சிறப்புள்ள வஸ்துக்களைக்குறிக்கும் தன்மை அந்த சப்தத்துக்கு இருப்பதுபற்றி மற்றவிடங்களில் போல இங்கும் விஷ்ணு பக்திரூபமான சிறப்புள்ளவர்களாக இருப்பதால் அந்த பக்தியின் சிறப்பைக் காட்டுகிறது. அங்ஙனமாகில் ச்வேதம்ருத்திகா க்ருத புண்ட்ரதாரிகளிடங்களில்போல ஆநந்ததீர்த்தீயர்கள் முதலிய மற்றவர்களிடமும் விஷ்ணு பக்திரூபமான வஸ்துவின் சிறப்பைக்காட்டுவதற்காக இந்த ஸ்ரீசப்தம் ப்ரயோகிக்கப்பட வேண்டாமோ வெனில் அங்ஙனம் ப்ரயோகிப்பது நியாயமே. ஆயினும் பங்கஜம் முதலிய பதங்களைப்போல இது, ச்வேதம்ருத்திகா கல்பித புண்ட்ர தாரிகளிடம் யோகரூடமாக ஒப்புக்கொள்ளத்தக்கது.

மற்ற ஸித்தாந்திகளைவிட விலக்ஷண ஜ்ஞானமுடையவனாக இருத்தலே ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம். விலக்ஷண ஜ்ஞானமாவது :—சேதநாசேதநங்களுடைய அத்யந்தபேதம் ப்ரமாணஸித்தமாதலால் எல்லாம் ப்ரஹ்மத்ரவ்யத்தின் பரிணாமம் என்கிற பாபிஷ்டமான மதத்தினுடைய குஹனாயுக்திகளாலும், ஜீவேச்வரபேதமும், அப்படியே தேவாதிரூபர்களான ஜீவர்களுடைய அந்யோந்யபேதமும், சுகம் துக்கம் முதலியவற்றின் வ்யவஸ்தையினால் ப்ராமாணிகமாக இருக்க ப்ருஹ்மருத்ரேந்திராதி தேவதைகளும் ஈச்வரனோடும் தன்னில்தானும் வேறுபடாதவர்களென்கிற ப்ராமகமதோபன்யாஸத்தாலும் மும்மூர்த்திகளும் ஸமானர்களென்றும், மும்மூர்த்திகளும் ஒரு வ்யக்தி என்றும், இம்மூவர்களுக்கும் நியந்தாவான துரீயமான ஒரு மூர்த்தி உளதென்றும், மும்மூர்த்திகளுள் வேறு ஒரு மூர்த்திக்கு ஆதிபத்யம் என்றும் பிதற்றுகிற பாஹ்யமத குயுக்திகளால் கலங்காத சித்தவிருத்தியுடன்கூடி இருத்தலே. புறச்சமயங்களால் கலங்காததும் திடமாக ஆஸ்திகதையுடன் கூடியதும் வாஸுதேவன் ஒருவனே ஸர்வகர்மஸமாராத்யன், இவனே புக்தியையும் முக்தியையும் தருபவன், இவனுக்குச் சமனும் மேலானவனும் ஒருவனுமில்லை, எல்லாம் இவனுடைய விபூதியே என்கிற நிச்சயமுள்ளதுமான மனதை உடையவனேதான் ஸ்ரீவைஷ்ணவன் எனப் பகரப்படுகின்றான்.

மேலும் அந்தப்புரஸ்திரீ எவ்வண்ணம் தன் கணவனைத்தவிர்த்து மற்றொரு புருஷனைக் கண்ணெடுத்துப்பார்க்கமாட்டாளோ அவ்வண்ணமாக

ஸ்ரீமந்நாராயணனைத்தவிர்த்து மற்ற தேவதைகளை எக்காலத்திலும் எவ்விடத்திலும் எந்த நிலைமையிலும் மனதினால்கூட நினையாமலிருத்தல் வைஷ்ணவத் தன்மைக்கு உரித்தது. ஆதலால் தான் இவர்களை சுத்தாந்த ஸித்தாந்திகளென்றும் அபியுக்தர்கள் வ்யவஹரிக்கின்றனர். சரீரயாத்ரை நம் கர்மாதீனமாக நடைபெறுகிறது. ஆத்மயாத்ரை பரமாத்மாதீனையாதலால் யான் கவலைப்படவேண்டுவது ஒன்றுமில்லை, ஸர்வசேஷீ பரமாத்மா, அவன் ஸர்வாந்தர்யாமீ, சேதநாசேதனங்களனைத்தையும் சரீரமாகக்கொண்டவன், ஜகத் வ்யாபாரம் முற்றும் அவன் லீலாகார்யம், ப்ராணிகளின் ஸ்ருஷ்டியோ ஸ்திதியோ ஸம்ஹாரமோ இவையனைத்தும் பரமாத்மாவின் தயாகார்யம், நித்யநைமித்திக கர்மாக்களைச் செய்பவன் அந்த பரமபுருஷனே, அவைகளுக்கு பலம் கொடுப்பவனும் அவனே, பலனும் அவனே, என்கிற அநுபவாத்மகமான ஜ்ஞானம் எவனுக்கு இருக்கிறதோ அவனே ஸ்ரீவைஷ்ணவன். 'யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ, தஸ்யைதே கதிதா ஹ்யர்தா: ப்ரகாஶந்தே மஹாத்மந:' என்கிற ச்ருதிவசனத்தின் வண்ணம் தேவதையினிடத்தில்போல ஆசார்யனிடத்தில் அஸாதாரணமான பக்தியைவைத்து நியமத்துடன் ரஹஸ்யங்களுடன்கூட மந்திர மந்திரார்த்தங்களை ஆசார்யோபதேசத்தால் பெற்று அவைகளை நிரந்தரமாக மனனம் செய்வதுடன் 'யஃ ஶ்ரோதி ஶாஸ்த்ரஜ்ஞா ஸம்விதோ வா தேவோ ஜநா: । ஶ்ரேயணீய: ஸதாம் ஶ்ரேஷ்ட: தஸ்மை ஸத்யாய ஈஜ்ஞம் ॥' என்கிற சுலோகத்தில் சொல்லிய வண்ணம் தனக்கு ப்ரஸித்தி வருவதிலும் திரவ்ய லாபம் கீர்த்தி லாபம் முதலியவைகளிலும் தன்னை எல்லோரும் புரஸ்கரிக்கவேண்டும் என்பதிலும் முற்றிலும் எண்ணத்தை இழந்து அதி விநீதனாய் பொறுமைக்கு இருப்பிடமாய் பாகவத ப்ராவண்யமுள்ளவனாய் தன்னை விற்பதற்குக்கூட பாகவதர்கள் பாத்தியமுள்ளவர்கள் என்னும் படியான நைச்யாநுஸந்தானத்துடன் கூடினவனாக இருப்பவன் ஸ்ரீவைஷ்ணவனெனக் கூறப்படுகிறான்.

இந்த ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தைப் பற்றி ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலுள்ள முக்கியமான சில வசனங்கள் உதாஹரிக்கப்படுகின்றன. [யமன் தன் தூதனுக்குவைஷ்ணவ லக்ஷணத்தை எடுத்துக் கூறுகிறான்.]

ந சலதி நிஜவர்ணதர்மதோ ய: ஸமமதிராத்மஸுஹ்ருத்விபக்ஷபக்ஷே ।
ந ஹரதி ந ச ஹந்தி கிஞ்சிதுச்சை: ஸிதமநஸம் தமவேஹி விஷ்ணுபக்தம் ॥

ஹே ஸேவக! எவன் தனக்கு உதித்ததான வர்ணதர்மத்தினின்று தவறாமலிருக்கிறானோ, எவன் மித்ர பக்ஷத்திலும் சத்துரு பக்ஷத்திலும் ஸம்பாவனையுள்ளவனோ, எவன் பிறர் பொருளை அபஹரியாமலும் ஒரு

பிராணிக்கும் தீங்கு செய்யாமலுமிருக்கிறானோ, ராகம் த்வேஷம் மோஹம் முதலிய மனோமலங்களில்லாமையால் மிக்க பரிசுத்தமான மனதை உடையவனான அம்மனிதனை விஷ்ணுபக்தனென்று அறிவாயாக.

கலிகலுஷமலேந யஸ்ய நாத்மா விமலமதேர்மலிநீக்ருதஸ்தமேநம் ।
மநஸி க்ருதஜநார்தநம் மநுஷ்யம் ஸததமவேஹி ஹரேரதீவபக்தம் ॥

சுத்தபுத்தியுள்ள எந்த மனிதனுடைய அந்தகரணமானது காமம் க்ரோதம் முதலிய அழுக்கினால் ஒளி இழந்ததாக செய்யப்படாமலிருக்கிறதோ எப்பொழுதும் தியானிப்பதினால் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிற ஜநார்த்தனனையுடையவனான அம்மனிதனை சிறந்த ஹரிபக்தனென்று அறிவாயாக. நிரந்தரமான பகவத் த்யானம் ஸ்ரீவைஷ்ணவ சிஹ்னமென்று இரண்டபொருள்.

விமலமதிரமத்ஸர: ப்ரஶாந்த: ஶுசிசரிதோऽகிலஸத்த்வமித்ரபூத: ।
ப்ரியஹிதவசநோऽஸ்தமாநமாயோ வஸதி ஸதா ஹ்ருதி தஸ்ய வாஸுதேவ: ॥

எவன் நிர்மலமான புத்தியுள்ளவனாகவும் மாத்ஸர்யமில்லாதவனாகவும் மிக்க சாந்தியுள்ளவனாகவும் சுத்தமான நடத்தையுள்ளவனாகவும் ஸமஸ்த ப்ராணிகளிடங்களிலும் மித்ரபாவத்தை வஹித்தவனாகவும் ப்ரியமாகவும் ஹிதமாகவுமிருக்கிற வசனங்களை உரைப்பவனாகவும், கர்வம் துரபிமானம் கபடம் இவைகளை இழந்தவனாகவும் இருப்பவனோ அந்த மஹாபுருஷனுடைய ஹ்ருதயத்தில் வாஸுதேவன் எப்பொழுதும் இடைவிடாமல் வாஸம் செய்கிறார். இங்கு கூறப்பட்டுள்ள குணங்களுள்ளவன் வைஷ்ணவனென்று கருத்து.

வஸதி ஹ்ருதி ஸநாதநே ச தஸ்மிந் பவதி புமாஞ்ஜகதோऽஸ்ய ஸௌம்யரூப: ।
க்ஷிதிரஸமதிரம்யமாத்மநோऽந்த: கதயதி சாரு ததைவ ஸாலபோத: ॥

ஆதியந்தமில்லாத அந்த வாஸுதேவன் எவன் உள்ளத்தில் ஸான்னித்தியம்செய்வனோ அம்மனிதன் இவ்வுலகத்துக்கு இன்பம் பயக்கும் தன்மைவாய்ந்த உருவமுள்ளவனாக ஆகிறான், செழிப்பாக வளர்ந்துவருகிற மாங்கன் முதலியது தன்னுடைய ஸௌந்தர்யத்தினாலேயே தனக்கு ஆதாரமாக இருக்கிறபூமியின் உள்ளேஇருக்கும் அதிகரம்யமான பூஸாரத்தைச் சொல்லுகிறதன்றோ. இதற்குக் கருத்துயாதெனில் ப்ரஸன்ன ரூபத்துடன் சேர்ந்திருத்தல் விஷ்ணுபக்தியின் சிஹ்னம் என்பது.

[illegible]
[illegible]

ஆதியந்தமில்லாதவரும் நந்தகம் பாஞ்சஜன்யம் கௌமோதகீ என்கிற ஆயுதங்களை தரித்தவரும் அழிவற்ற ஸ்வரூபமுள்ளவரும் ஆறுகுணமுள்ளவரும் பக்தர்களின் பாபத்தைநினைத்த மாத்திரத்தினுல் போக்குபவருமான ஸ்ரீவாஸுதேவன், உள்ளத்தில் இருப்பாரேயாகில் அவனுடைய பாபமானது பாபத்தை நாசம்செய்பவருரான வாஸுதேவனுல் சூர்யதேஜஸினுல் இருள்போல நாசம்பண்ணப்பட்டதாக ஆகிறது. பாபஸம்பந்தமற்றிருத்தல் விஷ்ணுபக்த லக்ஷணமென்று கருத்து.

[illegible]
[illegible]

ஸேவகயமம் நியமம்முதலிய அஷ்டாங்கங்களுடன்கூடிய யோகத்தால் விலக்கப்பட்டிருக்கிற பாபத்தை யுடையவர்களும் நாள்தோறும் ஆச்ரிதர்களைக்காப்பாற்றுகிற விரதத்தினின்று நமது வானவரான ஸ்ரீவாஸுதேவனிடத்தில் மனதைச் செலுத்தினவர்களும் மதம் கர்வம் மாத்ஸர்யம் இவைகளை இழந்தவர்களுமான மனிதர்களுக்கு வெகுதூரத்தில் விலகிச்செல்வாயாக.

மதம்மாத்ஸர்யம் முதலிய ஹேயகுணங்களைவிட்டு ஸாங்கமான யோகாநுஷ்டானத்தால் தர்சநஸமாநாகாரமான பகவத்தியாநத்தில் நிலைபெற்றிருத்தல் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமென்பது திரண்டபொருள்.

[illegible]
[illegible]
[illegible]

எவன் ஒருவருமில்லாத இடத்தில் பிறர்பொருள் என்கிற புத்தியினுல் ஸ்வர்ணத்தைக்கூட த்ருணம்போல் எண்ணுகிருனே ஸ்ரீவாஸுதேவனிடத்திலேயே மனதை த்ருடமாக வைத்திருக்கிருனே அந்த புருஷசிரேஷ்டனை விஷ்ணுபக்தனென்று அறிவாயாக.

[illegible] என்கிற வசநத்தின்படி உலகத்தில் பற்றற்று பரமாத்மாவான ஸ்ரீவாஸுதேவனை நிரந்தரம் தியாநித்துக்கொண்டிருத்தல் ஸ்ரீவைஷ்ணவ சிஹ்னம்.

(இன்னும் வரும்).

ஸ்ரீ:

உபநயநம்.

(ஸ்ரீ: உப. காடந்தேத்தி-கோபாலாசார்யர்.)

(1) பிராஹ்மணர்களாய்ப் பிறந்தவர்களுக்கு வேதமூலங்களாயும் ப்ராஹ்மண்யாபாதகங்களுமான கர்ப்பாதானம் முதல் 40 ஸம்ஸ்காரங்கள் இன்றியமையாதவைகளென்றும், அவைகளினுல் பீஜத்தாலும் கர்ப்பவாஸத்தாலுமுண்டாகிய தோஷங்கள் நசிக்கின்றனவென்றும், வேதமோதல், காலைமாலை ஹோமங்கள், த்ரைவித்தியங்கள், ஜ்யோதிஷ்டோமம் முதலிய யாகங்கள், பஞ்சமஹாயஜ்ஞங்கள், ஆகிய இவைகளினுல் இந்த ப்ராஹ்மண சரீரம் ப்ரஹ்மப்ராப்திக்கு யோக்யமாய்ச் செய்யப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறது. அந்த ஸம்ஸ்காரங்களில் உபநயனம் என்கிற ஸம்ஸ்காரம் 8-வதாகச் சொல்லப்பட்டது. இது வேதாத்தியயனத்திற்கு அங்கம். நல்ல கதிகளைத் தரக்கூடிய தர்மங்களை வேதம் ஓதி உணரவேண்டியிருப்பதினுலும், வேதமோதுதல் உபநயந ஸம்ஸ்காரத்தை அபேக்ஷிப்பதாலும், அது த்ரைவர்ணிகர்களை அதிகாரிகளாகக் கொண்டு சூத்ராதிகளுக்கு யோக்யமில்லாமலிருப்பதாலும், அது முதன்மையாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமாகையால் அடியேனுக்குத் தெரிந்தவரையில் நிரூபணம் செய்கிறேன். கர்ப்பாதானம் முதல் 40 ஸம்ஸ்காரங்களை நிரூபணம் பண்ணயத்தனித்த கௌதமர் கர்பாதாநாதி ஸம்ஸ்காரங்களை உபேக்ஷித்து உபநயனம் துடங்கி நிரூபிப்பதால் இதற்குள்ள ப்ராதான்யம் வெளியாகிறது. அதினுல் தெய்வானுபபத்தியினுல் அதற்குரிய காலங்களில் கீழ்க்கூறிய ஸம்ஸ்காரங்கள் செய்யப்படாவிடினும் அவ்வளவு தோஷமாகாது. உபநயநம் ஒன்று மாத்திரம் செய்யப்படாமல் போனுல் விவாஹங்களில் அதிகார

---

(1) [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(மநுஸ்ம்ருதி ௨-26, 27, 28.)

மில்லாமையும் ஏற்படுவதால் ப்ராதான்யம் ஸித்திக்கிறது. (1) உபநயந காலம்:— 'ப்ராஹ்மணனுக்கு கர்ப்பத்திலிருந்து எட்டாவது வருஷத்திலும், க்ஷத்ரியர்களுக்கு 11-வது வருஷத்திலும், வைச்யர்களுக்கு 12-வது வர்ஷத்திலும் உபநயநம் செய்விக்கவேணும். கர்பாஷ்டமம் என்பதால் ஜநநத்திலிருந்து எட்டாவது வருஷம் விலக்கப்படுகிறது. ஆபஸ்தம்பர் வஸந்தருது க்ரீஷ்மருது சரத்ருது இவைகளில் ப்ராஹ்மணர்கள் மூவர்களுக்கு உபநயநம் என்றார். காலாம்ருதம் முதலிய ஜ்யோதிஷ நிபந்தன க்ரந்தங்களிலும் சுபங்களான திதி வாரம் நக்ஷத்ரம் லக்னம் இவைகள் மூன்று வர்ணங்களின் அதிபதிகளின்பலம் வேதாதிபதிகளின் பலம் இவைகள் கூடியிருக்கச்செய்யப்படும் உபநயந விசேஷபலத்தைக் கொடுக்குமென்று சொல்லியிருக்கிறது. உபநயனத்தில் விலக்கவேண்டிய காலங்களும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை எடுத்தால் விரியுமாதலால் அவைகளை அங்கேயே பார்த்துக்கொள்வது. இதில் வேறு பக்ஷமுமுண்டு. அதாவது : ப்ருஹ்மதேஜஸ்ஸை விரும்பின பிதா 5-வயதில் ப்ராஹ்மணனுக்கும், க்ஷத்ரியனுக்கும் வைச்யனுக்கும் பலத்தையும் பொருளையும் விரும்பி முறையே 6-7-வருஷத்திலும் உபநயனம் பண்ண விதியுண்டு. ப்ராஹ்மணர்களுக்கு 16-வயதிற்குள்ளும் க்ஷத்ரியர்களுக்கு 22-வயதிற்குள்ளும் வைச்யர்களுக்கு 24-வயதிற்குள்ளும் ஆபத்காலத்தில் உபநயநம் செய்யலாம். ஆபத்தில்லாதபோது முக்கிய காலத்திலேயே செய்யவேண்டும். (2) உபநயநம் என்கிறபதத்தின் அர்த்தமும் அதன் ஸ்வரூபமும் இங்கு நிரூபிக்கப்படுகிறது. உபநயநமென்பது ப்ராஹ்மண்யத்தை ஸம்பாதித்துக்கொடுக்குமவையான ஸம்ஸ்காரங்களில் ஒன்று. ஸம்ஸ்காரமென்பது வைதிகங்களான கர்மங்களை அநுஷ்டிக்க யோக்யதையை உண்டாக்குமது. இந்த உபநயந ஸம்ஸ்காரம் வேதாத்யயநத்திற்கு அங்கம். பங்கஜம் முதலிய சப்தம் போல் இந்த சப்தம் யோகரூடம். அதாவது காரண இடுகுறிப்பெயர். அதாவது உப - ஸமீபத்தில், நயநம் - அழைத்துக்கொள்ளுதல். குமாரன் வேதத்தை அத்யயநம் செய்வதற்கு அங்கமாக ஆசார்யனால் தன்னுடைய ஸமீபத்தில் அழைத்துக்கொள்ளப்படுகிறானதலால் இப்பெயர் வந்தது, இந்த உபநயனம் ப்ராஹ்மணர்களுக்கு இரண்டாவது ஜந்மம், ஆதி ஜாதியினால் ஏற்பட்ட ப்ராஹ்மண்யத்தைவிட இரண்டாவதான இந்த உபநயனமாகிற ஜந்மம் சிறந்தது. இந்த ஜந்மத்தில் ஸாவித்ரீ மாதாவாகவும் ஆசார்யன் பிதாவாகவும் சொல்லப்படுவார்கள். அந்த உபநயநம் பிதாயில்லாமல்போனால் எவன் அதைச் செய்விப்பானோ அவன் ஆசாரியன். (1) எவன் சிஷ்யனை உபநயநம் செய்வித்து வேதங்களை அங்கங்களுடனும் கல்பங்கள் ரகஸியங்கள் இவைகளோடு ஓதி வைக்கிறானோ அவன்தான் ஆசாரியன் என்று ஆசாரிய லக்ஷணம். இப்படிப்பட்ட ஆசார்யனால் உபநயநம் செய்யப்படவேண்டும். (2) ஸம்ஸாரத்திலிருந்து மறுபடியும் ஸம்ஸாரத்தை அடைகிறான். அவித்வானை எவன் உபநயநம் செய்விப்பானோ என்பதாலும், (3) ஸத்குலத்தில் பிறப்பு ப்ருஹ்மஜ்ஞாநம் இவை நிறைந்த ஸமாஹிதனை ஸம்ஸ்கர்த்தாவை ஆசாரியனாய் வரிக்கவேணுமென்பதாலும் அவித்வான் உபநயநம் செய்விக்கத்தகாதவன் என்பது விளங்குகிறது. இந்த உபநயன ஸம்ஸ்காரத்தை ஸரியான காலங்களில் செய்யப்பெறாமல் போனால் வ்ராத்தியனென்றும் ஸாதுக்களால் நிந்திக்கத் தகுந்தவனாகிறானென்றும் வைதிக கர்மங்களிலிருந்து நழுவினவர்களென்றும் சொல்லுகிறது. ஆகையினால் காலத்தை அதிக்ரமிக்காமல் உபநயநம் பெறவேணும். அப்படி உபநயநமில்லாவிடில் வ்ராத்யன், அதாவது ஸம்ஸ்கார ஹீநனாவான்.

இந்த உபநயநம் பிராமணர்முதலிய மூவர்களுக்கு உரியதேயொழிய சூத்ராதிகளுக்கு கிடையாது. ஆதலினாலேயே வேதாத்யந மில்லையென்கி

(1) கர்பாஷ்டமே(அ)ப்தே குர்வீத ப்ராஹ்மணஸ்யோபநாயநம் ।
கர்பாதேகாதஶே ராஜ்ஞோ கர்பாத்து த்வாதஶே விஶ: ॥
ப்ரஹ்மவர்சஸகாமஸ்ய கார்யம் விப்ரஸ்ய பஞ்சமே ।
ராஜ்ஞோ பலார்திந: ஷஷ்டே வைஶ்யஸ்யேஹார்திநோ(அ)ஷ்டமே ॥
ஆஷோடஶாத் ப்ராஹ்மணஸ்ய ஸாவித்ரீ நாதிவர்ததே ।
ஆத்வாவிம்ஶாத் க்ஷத்ரபந்தோராசதுர்விம்ஶதேர்விஶ: ॥
(மநுஸ்ம்ருதி 2. 36, 37, 38.)

(2) ஜந்மநா ஜாயதே ஶூத்ர: கர்மணா ஜாயதே த்விஜ: । வேதாப்யாஸேந விப்ரத்வம் ப்ரஹ்ம ஜாநாதி ப்ராஹ்மண: ॥ சூத்ரர்களுக்கு உபநயநமில்லாமையால் அவர்கள் ஏகஜாதியென்று வ்யவஹரிக்கப்படுவார்கள்.

(1) உபநீய து ய: ஶிஷ்யம் வேதமத்யாபயேத் த்விஜ: ।
ஸகல்பம் ஸரஹஸ்யம் ச தமாசார்யம் ப்ரசக்ஷதே ॥
மநுஸ்ம்ருதி.

(2) தமஸோ வா ஏஷ தம: ப்ரவிஶதி யமவித்வாநுபநயதே
ப்ராஹ்மணம்.

(3) தஸ்மிந்நபிஜநவித்யாஸமுதேதம் ஸமாஹிதம் ஸம்ஸ்கர்தாரமீப்ஸேத் ।
ஆபஸ்தம்ப ஸூத்ரம்.

றது. ஸ்திரீகளுக்கும் ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்கள் மந்திரமில்லாமல் செய்யவேண்டும். விவாஹம் ஒன்றுமாத்திரம் மந்திரத்தை முன்னிட்டுச் செய்யவேணும். அது உபநயந ஸ்தானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. உபநயநத்தைப்பற்றிய வரலாறு ஒன்று சாந்தோக்யோப நிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு:—ஜபாலையின் புத்திரன் ஸத்தியகாமன் என்பவன் தன்தாயைநோக்கி 'அம்மா! வேதாத்யயநம் செய்வதற்கு குருகுலவாஸம் செய்ய நினைத்திருக்கிறேன். வேதாத்தியயனத்துக்கு உபநயநம் அங்கம், உபநயநத்துக்கு கோத்திரம் தெரியவேணும். என்கோத்திரம் யாது?' எனக்கேட்டான்.

குழந்தாய்! நான் அதிதிபூஜையிலே கண்ணுயிருந்தேன். உன்னை யௌவநத்திலேயே பெற்றேன். கோத்ரமென்னதென்பது எனக்கு விளங்கவில்லை. என்பேர் ஜபாலை. உன்பெயர் ஸத்தியகாமனென்று சொல், என்று தாய் பதில் சொன்னாள்.

அவன் கௌதமகோத்திரத்தில் பிறந்த ஹரித்ருத்மதரிடம்போய் நான் தங்கள் சிஷ்யன். குருகுலவாஸம் செய்யவந்தேனென்றான். உன்கோத்திரமென்னவென்று கௌதமர் ஸத்தியகாமனை வினவினார். எனக்குத்தெரியாது. என்தாயாரைக் கேட்டேன். அதிதிபூஜையில் நோக்காயிருந்ததால் கோத்திரம் இன்னதென்று தெரிந்துகொள்ளவில்லை யென்றும், யௌவநத்திலேயே என்னைப் பெற்றபடியால் வெட்கத்தினால் என்பிதாவைக்கேட்டுத்தெரிந்து கொள்ளவில்லை யென்றும், குருகேட்டால் ஜபாலையின் புத்திரன் ஸத்தியகாமன் எனச் சொல்லு என்றும், என்தாயார் சொன்னாள், ஆதலில் நான் ஜபாலையின் புத்திரன் ஸத்தியகாமன், எனக்கு உபநயநம் செய்யவேணு மென்றான்.

அதைக் கேட்ட கௌதமர் பிராமணரல்லாதவர்கள் இங்கனம் கபடமற்ற வார்த்தையைச் சொல்லமாட்டார்கள். உண்மைசொல்வதால் ஸந்தோஷித்தேன், ஸமித்துக்களைக்கொண்டுவா, உனக்கு உபநயநம் செய்விக்கிறேனென்று சொல்லி விதிப்படி உபநயநம் செய்வித்தார். அவன் குருகுலவாஸம் பண்ணி ப்ருஹ்மத்தை அறிந்தான்—என்பது இக்கதையால் உபநயநமென்பது ஆசாரியன் சிஷ்யனைக்குறித்து செய்கிற ஸம்ஸ்காரமென்றும் பிறகு வேதாத்தியயநம் செய்வதற்குரியவனாகினா னென்பதும் சொல்லப்படுகிறது. வேதத்திற்கு அங்கமென்பதும் ஸித்திக்கிறது.

இக்காலத்தில் அத்தியயநத்தின் தீநதசையையும், உபநயநத்தின் நிலைமையையும் நினைக்கும்பொழுது ஆராத்துயரம் உண்டாகிறது. பிராம்மணர்களுக்கு தனம் வேதம் என்று கொண்டாடப்பட்ட மறை மறையத்தலைப்பட்டது. (இன்னும் வரும்.)

ஸ்ரீ:

அபிமானமும் பஹுமானமும்.

[ஸ்ரீ. உப. வே. ஸ்ரீசைல தாதாசார்யர்.]

இவ்விரண்டும் ப்ரீதியின் விசேஷங்களே. ஆனாலும் இவ்விரண்டிற்கும் பெரியபேதம் உண்டென்பது எல்லோரும் அறிந்த விஷயமேயாம்.

கண்ணியமுடையவர்கள் தங்கள் ப்ரீதிக்கு இலக்காக்கிக்கொண்ட வஸ்துக்களிடத்தில் வைத்திருந்த ஆதரத்தை அபிமானமென்றும் பகுமானமென்றும் சொல்வதாய் ஏற்படுகிறது. ஆனால் அபிமானமென்பது ஒருபடி தாழ்ந்த விஷயத்தில் என்றும் பகுமானமென்பது ஒருபடி உயர்ந்த விஷயத்திலென்றும் வழக்கமுறையில் நிச்சயிக்கப்படும்.

மஹாபுருஷர்களின் அபிமானத்தைப்பெற்ற ஸ்தாவரமோ ஜங்கமமோ எந்த வஸ்துவானாலும் எல்லாவிதத்திலும் மேம்பாடு கூடியதேயாம். ஆதலால் அம்மஹாபுருஷர்களிடத்தில் பக்தியுடைய புருஷர்களுக்கு அவை (அப்படி மஹாபுருஷர்களின் அபிமானத்திற்கு இலக்கான வஸ்துக்கள்) பகுமானிக்கப்படத் தக்கவையாகின்றன. அபிமானிக்கும் மஹாபுருஷர்களின் பெருமைக்கும் அபிமானத்தின் தாரதம்மியத்திற்கும் பக்திமான்களின் ஸ்வபாவத்திற்கும் பக்தியின் தாரதம்மியத்திற்கும் ஏற்றவிதமாகப் பஹுமானத்தின் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. தீர்க்காலோசனை செய்துபார்க்குமிடத்தில் இந்த விவரம் தெரியவரும். இது நியாயத்திற்கொத்ததேயல்லது வேறன்று.

"ஏஷ பூர்வாச்ரமோ ராம வாமநஸ்ய மஹாத்மந: ।
ஸித்தாச்ரம இதி க்யாத: ஸித்தோ ஹ்யத்ர மஹாதபா: ॥
தேநைவ பூர்வமாக்ராந்த ஆச்ரம: ச்ரமநாசந: ।
மயாபி பக்த்யா தஸ்யைவ வாமநஸ்யோபபுஜ்யதே ॥"

(பகவான் வாமனவதாரம் செய்தருளுவதற்கு முன்னமே இவ்விடத்தில் தபஸ்ஸு செய்தருளினார் காசியபமஹர்ஷி இங்கே தபஸ் ஸித்திபெற்றார். வாமனவதாரம் இவ்விடத்திலேயே. வாமனர் இங்கேதான் தபசுசெய்தார். ஸம்ஸாரபரிச்ரமத்தைப் போக்கவல்லது, இந்த ஆச்ரமம் ஸித்தாச்ரமமென்று பிரஸித்திப்பெற்றது. அந்த வாமனரூபியான பகவானிடத்திலுள்ள பக்தியாலே நான் இந்த இடத்திலேயே வாஸம் செய்கிறேன்.) என்று விசுவாமித்திர பகவான் அருளிச்செய்தது நம்போல்வாருக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

வாமனாவதாரத்தில் பகவானுக்கு அபிமான விஷயமாக இருந்த ஸித்தாச்ரமம் பகவத்பக்தரான ஸ்ரீவிசுவாமித்திர மஹர்ஷியின் பகுமானத்திற்கு விஷயமாகவாயிற்று. இந்த ந்யாயத்தைக்கொண்டே பிரஸித்தி பெற்ற பழைய திவ்யதேசங்களிலிருந்து ஸ்ரீசடகோபமோ ஒரு அர்ச்சாவதார எம்பெருமானோ புதிதாக நிர்மாணம் செய்யப்படுகிற கோவில்களுக்கு எழுந்தருளப்பண்ணி வைக்கிறதும், அதை அபிமானமாக பாவித்து இந்த திவ்யதேசத்தெம்பெருமான் அபிமானமென்று வ்யவஹரிக்கிறது. அப்படி அபிமானம் ஏற்பட்டால் அல்லது புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட கோவிலில் பெரியோர்கள் தீர்த்த ப்ரஸாதங்கள் பரிக்ரஹிக்கிறதில்லையென்பதும் எங்கும் ஆசாரத்தில் இருந்து வருகிறது.

இந்த அநுஷ்டானத்திற்கு ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்திலாவது வைகாநஸாகமங்களிலாவது ப்ரமாணமில்லாதிருந்தும் பெரிய பெரிய மஹான்களின் அநுஷ்டானம் வெகுநாளாக இருந்துவருகிறதென்பது மறுக்க முடியாதது. சாஸ்திர விரோதமில்லாத ஸதாசாரம் ப்ரமாணமேயாகையால் இதை உபேக்ஷிக்க இடமில்லை. இந்த விச்வாமித்ர மஹர்ஷியின் வார்த்தையும் இதற்கு ஸூசகப்ரமாணமாகக்கூடும்.

‘ தைவதவதுபாஸ்ய ஆசார்ய ’

(தேவதையைப்போலே ஆசார்யனையும் உபாஸிக்கவேண்டியது) ஆகையால்,

‘ ப்ருஹுமானஸ்தத்வஸ்துஷு ஸர்வதா ’

(ஆசாரியனது வஸ்துக்கள் திருமாளிகை முதலியவைகளில் பெருப்பெருத்த பகுமானம் செய்யவேண்டு)மென்று காட்டியருளப்பட்டது.

ஸ்ரீராமகிருஷ்ணாதிகளான அவதாரங்கள்போலே ஆசார்யவதாரமும் எம்பெருமானது விபவாவதாரபேதமென்பது சாஸ்த்ரஜ்ஞசிஷ்ட ஸம்ப்ரதாயமாகையால் திருவயோத்தியை திருமதுரைகள்போலே திருக்குருகைமுதலிய திவ்ய ஸ்தலங்களும் நம்மவர்க்கு பகுமான விஷயங்களாம். திருச்சித்ரக்கூடம், திருப்பஞ்சவடி, திருப்பிருந்தாவனம், திருவாய்ப்பாடி முதலிய ஸ்தான விசேஷங்கள் போலே திருப்புளி முதலிய திருவிளையாடல் ப்ரதேசங்களும் ஆஸ்திகர்களுக்கு விசேஷ பகுமான பாத்திரங்களாயிருக்கும்.

நம் தௌர்ப்பாக்கிய பரிபாக விசேஷத்தாலே பகவதவதாரஸ்தலங்கள் அந்யஸம்ஸர்க பரிவேஷ்டிதமாய்ச் சமைந்திருப்பதுபோலே ஆசார்யாவதாரஸ்தலங்களும் சிலது அவ்விதமாகவே அந்யர்களால் ஆக்ரமிக்கப்பட்டு வெறுக்கக்கூடிய தசையிலிருக்கிறது மிகவும் வியசனிக்கத்தக்க விஷயமேயாம்.

அர்ச்சாவதார ரூபியான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதிகளெல்லாம் உகந்தருளின நிலங்களென்று ஸம்ப்ரதாயத்தில் வியவஹரிக்கப்படுகிறபடியால் அர்ச்சாவதாரம் உகந்தருளின திருமேனி யென்னப்படவேண்டும். “ தமருகந்த தெவ்வுருவும் ” என்கிற பாசுரத்தை நினைப்பது. அப்படிப்பட்ட உகந்தருளின நிலங்கள் எல்லாம் ஒரேபடியாக நினைக்கவேண்டியது ஒருமுறைக்கு நியாயமாகத் தோற்றினாலும் அவரவர் அபிஸந்திக்கேற்ப விரோதம் கற்பித்து பக்திவிசுவாஸங்களில் தாரதம்யம் பாவிக்கையும் நியாயவிரோதமாகாது. ஆனால் அதற்காக உபபாதிக்கப்படும் ஹேதுக்கள் ப்ராமாணிகங்களாயும் மத்தியஸ்தர்கள் அங்கீகரித்து ச்லாகிக்கக்கூடியவையாயும் இருக்கவேண்டும். அப்படிக்கில்லையானால் பரிஹாஸ்ய மாத்திரமே பலமாய் நிற்கும்.

மேலும் ஆஸ்தையின் மிகுதியால் உண்மைமறைந்துவிடும்படி உபபாதிக்கத்தொடங்கிவிட்டால் கடைசியில் பலமொன்றுமில்லாதே காக தந்த விசாரமாக முடிந்துவிடும். ஆகையால் எந்த தசையிலும் உண்மையை அபலபிக்கும்படி முயற்சி செய்யலாகாது.

அதுபோலவே அதிகமாக பகுமானம் செய்யவேண்டியதற்காக புதிய புதிய அபிமானங்களைக் கற்பிக்க முயற்சிசெய்வதும் நியாயமுறை வழுவேயாம். வாக்குவலிமையால் ஓரிடத்தில் ஜயம் பெற்றாலும் மற்றோரிடத்தில் பராஜயம் நேருவது நிச்சயமாம்.

“ தர்கோ ந ப்ரதிஷ்டதி ” (யுக்திவாதம் நிலைநிற்கமாட்டாது) என்கிற ஸ்ரீஸூக்தியை நினைப்பது. “ தர்காப்ரதிஷ்டாநாத் ” என்று இவ்வர்த்தத்தை ஸூத்ரகாரரும் அருளிச்செய்திருக்கிறார்.

“ பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே, மெய்யுடை யொருவன் சொல்லமாட்டாமையால் பொய்போலும்மே பொய்போலும்மே ” என்று தமிழர் கட்டுரையுண்டு.

“ பிணங்கியமார்பிதற்றுங் குணங்கெழு கொள்கையினானே ” என்று ஆழ்வார் அருளிச்செய்கையாலும். “ ஸ்வேதரஸமயிந: ஸ்வகுண ங்களைக்காட்டில் ஸ்வஸமயிந: ஸ்வகுணங்களுக்கு ப்ராபல்யம் ஸாதிப்பதமாக உத்கர்ஷத்தை ப்ரதிபாதிய நின்றுகொண்டு அயர்வறு மமரர்கள் அக்ரமமாகக்கொண்டு அநுபவிக்கிற கல்யாண குணங்கள் ” என்று பிள்ளான் வியாக்யானமிட்டருளுகையாலும் இத்தன்மைய விஷயங்களில் சர்ச்சை அபசாரகோடியில் சேராது என்பது ஸர்வஸம்ப்ரதிபந்நமாம். நம்

முன்னோர்கள் ஒவ்வோர் அவதார விஷயத்தில் ஒவ்வொருவர் மண்டியிருப் பார்களென்று ஐதிஹ்யமு மிருக்கிறது. தொண்டரடிப்பொடி யாழ்வார் அரங்கனையல்லது பாடினாரில்லை யென்பது நிச்சயம். உகந்தருளின நிலங்கள் நூற்றெட்டென்பது ஒருகொள்கை. இவை ஸ்வயம்வ்யக்த மென்பது ஸ்ரீ பாஞ்சராத்திர சாஸ்திரஸம்மதி. பட்டர் திருவடிகளான பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி யென்று ஒருபிரபந்தம் அரு ளிச்செய்திருக்கிறார். அதை,

"பதின்மருரைத்த பதியொரு நூற்றெட்டுந்
துதிசெய்யவந்தாதி சொன்னான் அதிக
குணவான பட்டரிரு கோகனத்தான் சேர்
மணவாள தாசன் வகுத்து" என்று முடித்திருக்கிறார்.

அவர் கருத்துப்படி நூற்றெட்டுத்திருப்பதிகளும் ஆழ்வார்களால் பாடப் பெற்ற தென்றேற்படுகிறது.

க்ஷேத்ரேஷ்வேதேஷு ஸர்வேஷு முக்யாநி ஸாதகோத்தம ।
ஸ்ரீரங்கம் வேங்கடாத்ரிஶ்ச ஹஸ்திஶைலஸ்ததஃ பரம் ।
ததா நாராயணாத்ரிஶ்ச சத்வார்யேவ ஸதோத்தம ।"

என்று கோயில் திருமலை பெருமாள்கோவில் திருநாராயணபுரம் என்கிற நான்கு திருப்பதிகள் முக்கியதம மென்று ஸ்ரீபாஞ்சராத்திர சாஸ்திரத்தில் எடுத்துக்காட்டப்பட்டது. ஸ்ரீவைஷ்ணவர்களின் திருமாளிகைகளில் நடக் கும் சுபாசுப ஸந்தர்ப்பங்களில் "கோயில் திருமலை பெருமாள் கோவில் ஜீயாள் ஸ்ரீவைஷ்ணவாள்" என்று உத்கோஷிப்பது நாளது வரையில் நடந்தேறிவருகிறது. மேல்தேசங்களில் பெருமாள் கோவிலுக்குப் பிறகு திருநாராயணபுரம் திருநாமம் சொல்லப்படுகிறதாகக் கேள்வி.

இதில் ஜீயாளென்பது ஆசார்யர்களையே, ஸந்யாஸிகளையல்ல. ஸ்ரீபா ஷியகாரர் பெரியநம்பிகளை ஜீயா என்று அழைத்ததாக ஐதிஹ்யம் சொல் லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸ்தானவிசேஷாதிகாரத்தில் இந்த மூன்று திவ்யதேசங்களைப்பற்றி மாத்திரமே பாசுரங்கள் மூன்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ப்ரதிதினமும் ஸந்த்யோபாஸநம் ஜபம் முடிந்தது மெல்லோரும் அநுஸந்திப்பதும் ஸ்ரீபாஷியகாரர் அருளிச்செய்ததாகப் பிர ஸித்திபெற்றதுமான "ஸ்ரீரங்கமங்கள நிதிம்" என்கிற சுலோகத்தில் அந்த நாலு திவ்யதேசங்களே மங்களாசாஸநம் செய்யப்பட்டிருக்கிறதுகள்.

(இன்னும் வரும்.)

க்ஷபித்துக்கொண்டு, வேறு - அப்படிக்கில்லாமல் புத்தி பூர்வகமாக, உளது- உண்டான கர்மத்தை, விரகால் - உபாயத்தினால், அதாவது ப்ராயஶ்சித்தம், லகுஶிக்ஷை இவைகளினால், மாற்றும் - நசிப்பிக்கிற, என் - எனக்கு ஸ்வாமி யாகிய, செய்ய - சிவந்ததான, தாமரைக்கண் - தாமரைப் புஷ்பங்கள் போன்ற திருக்கண்களை உடைய, பெருமான் - ஸர்வேஶ்வரனை எம்பெருமானுடைய, எண்ணம் - அபிப்ராயத்தை, ஆஶ்ரிதர்கள் திறத்தில் இருக்கும் ப்ரீதிவிசே ஷத்தை என்றபடி, எண்ணாதார் - அநுஸந்தியாதவர்கள், எட்டிரண்டும்- எட்டையும் இரண்டையும் சேர்த்தால் என்னாகும் என்பதையும், எண்ணா தாரே - எண்ணாதவர்கள், அதாவது இவ்வளவு ஸாமாந்ய ஜ்ஞானம்கூட இல்லா தவர்கள் என்றபடி. அன்றிக்கே எட்டு - திருவஷ்டாக்ஷரத்தையும், இரண்டும்- த்வயத்தையும், எண்ணாதார்-பராமர்சியாதவர்கள். அதுவுமன்றிக்கே, இரண் டும் - த்வயத்தையும் சரமஶ்லோகத்தையும் என்றாகவுமாம், அதாவது ரஹஸ் யார்த்த ஜ்ஞானம் இல்லாதவர்கள் என்றபடி. இங்கு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அபராத பரிஹாராதிகாரத்தில் அருளிச் செய்திருக்கும் 1 'ப்ராரப்தேதரபூர்வபாபமகிலம் ப்ராமாதிகம் சோத்தரம் ந்யாஸேந க்ஷபயந்நநுக்ரமஹிதப்ராரப்தபங்கம் ச நஃ । தீபூர்வோ த்தரபாப்மநாமஜநநாத் ஜாதே ததஸ்தந்நிஷ்க்ருதேஃ க்ஷ்மயா வா ஶிக்ஷயா வா நயந் ஸ்வீகரோதி ப்ரபுஃ ॥' என்கிற ஶ்லோகத் தை அநுஸந்திக்கவும். 11

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உ.ப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீபரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

ஐந்தாவது ப்ரஸாதந பர்வம் முற்றிற்று.

---

1. ஸர்வஶக்தனான பகவான் ப்ரபத்திக்கு முன்பு செய்யப்பட்ட நம்முடைய எல்லா ப்ராரப்தபாபங்களைத் தவிர மற்றெல்லாப்பாபங்களையும், ப்ரபத்திக்குப் பிறகு செய்யப்படு கிற புத்தி பூர்வகம் இல்லாத பாபங்களையும், தேசகாலாதி வைகுண்யத்தினால் உண்டா கும் புத்தி பூர்வகபாபங்களையும் (இது சகாரத்தின் அர்த்தம்), நம்மால் ஒப்புக்கொள்ளப் படாத ப்ராரப்தத்தின் ஒரு பாகத்தையும் ப்ரபத்தியினாலேயே போக்கடித்துக்கொண்டு புத்தி பூர்வகமான உத்தராகங்கள் உண்டாகாமையினாலும், அப்படி உண்டான போதிலும் அவைகளுக்கு ப்ராயஶ்சித்தம் செய்வதினாலும், க்ரூரமான ஸ்வபாவம் இருந்ததே யாகில், அதாவது ப்ராயஶ்சித்தத்தில் ப்ரவ்ருத்திக்காதபடியான கடின ஸ்வபாவம் இருந்ததேயாகில், லகுஶிக்ஷையினாலும் தோஷம் இல்லாதவனாகச் செய்துகொண்டு அங்கீகரிக்கிறான்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம: ॥

॥ ஷஷ்டம் உத்க்ரமண பர்வ ॥

உறையிட்ட வாளென வூனுளுறைகின்ற யோகிகளை
நறு மட்டொழி வற்ற நற்றுள வேந்திய நாயகனூர்
நிறை மட்டிலாத நெடும் பயன் காட்ட நினைத்துடலச்
சிறை வெட்டி விட்டு வழிப்படுத்தும் வகை செப்புவமே. 12

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேஸிகாய நம: ॥

ஆறுவது உத்க்ரமண பர்வம்.

இனி ஶரீரத்தைவிட்டு உத்க்ராந்தி நடக்கும் ப்ரகாரத்தை விஸ்தாரமாக நிரூபித்தருளப் போகிறவராய் அதை முதலில் ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—‘உறையிட்ட’ என்றாரம்பித்து.

[ப - ம்.] உறையிட்ட - உறையிலே போடப்பட்ட, வாளென - வாளுக்கு ஸத்ருஶமான, அன்றிக்கே வாள் என்று சொல்லும்படியான, ஊன்-மாம்ஸத்திற்கு, உள் - உள்ளே, அதாவது மாம்ஸமயமான ஶரீரத்திற்குள்ளே என்றபடி, உறைகின்ற - வஸிக்கிற, யோகிகளை - அஷ்டாங்க யோகத்தையாவது ஷடங்கயோகத்தையாவது அனுஷ்டித்த பக்த ப்ரபன்னர்களை, நறு - வாஸனையோடு கூடிய, மட்டு - தேன், ஒழிவற்ற - ஒழிவில்லாத, எப்பொழுதும் பரிமளத்துடன் கூடிய மதுவைப் பெருக்காநின்ற என்றபடி, நல்துளவு - நல்ல திருத்துழாய் மாலையை, ஏந்திய - ஶிரஸா தரிக்கிற, நாயகனூர் - நாதனான ஸர்வேஶ்வரன், நிறை - பூர்த்திக்கு, மட்டு - அளவு, இலாத - இல்லாததான, எல்லையில்லாத பூர்த்தியை உடைய என்றபடி, நெடும் - ஶ்லாக்யமான, பயன் - புருஷார்த்தத்தை, காட்ட - அனுபவிப்பிக்க, நினைத்து - ஸங்கல்பித்து, உடல - ஶரீரமாகிற, சிறை - காராக்ருஹத்தை, வெட்டிவிட்டு - நசிப்பித்து, சேதித்து என்றபடி, வழிப்படுத்தும் - அர்ச்சிராதி வழியில் நடத்துகிற, வகை - ப்ரகாரத்தை, செப்புவம் - நிரூபிப்போம், இந்தப் பர்வத்தில் என்றபடி. 12

இப்படி முன்பு பண்ணின ஸாதகங்களுக்கெல்லாம் தத்தததிகாராநுகுணமாக ஸ்ரவணாதி ப்ராயஸ்சித்தம் பண்ணி மேல் ஸாதகங்களில் முயலாதபடி உள்ளமுரை செயலுள்ள விம்மூன்றையு முள்ளிக் கெடுத்துக் குன்ற மெடுத்த பிரானடியாரொடு மொன்றி நின்று நாட்டாரோடியல் வொழிந்து, ஸூரிஸுலபமான ஸர்வகுணாநுபவம் பெறுமையாலே வாய்க் கட்டுண்டு திருப்பாற்கடலிலே முழுகினவனைப்போலே தன்னவஸ்தையைக் கண்டு, இரக்க மனத்தோடெரி

இந்த ஶரீரத்தைவிட்டு இவன் கிளம்பும் ப்ரகாரத்தை விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார் - ‘இப்படி’ என்றாரம்பித்து. இப்படி - கீழ்ப் பர்வங்களில் நிரூபித்தருளினபடி. ஸாதகங்களுக்கு - ஸம்ஸார பந்தகமான கர்மங்களுக்கு. தத்தததிகாராநுகுணமாக - அவரவர்களின் அதிகாரத்திற்குத் தக்கபடி, அதாவது அகிஞ்சனரா யிருக்கை, ஜ்ஞான ஶக்த்யாதிகளை உடையரா யிருக்கை, முதலிய அதிகாரத்திற்குத் தக்கபடி. ‘ஸ்ரவணாதி’ என்கிற இடத்தில் ‘ஆதி’ பதம் பக்தியைக் குறிக்கிறது. பக்தியை முதலில் எடுக்காமல் ப்ரபத்தியை முதலில் நிரூபித்தருளி இருப்பது அந்தப் பக்தியோகத்திற்கும் அங்கமாக இந்த ப்ரபத்தி அனுஷ்டிக்கவேண்டிய தாகையினாலே என்றறியத்தக்கது. முயலாதபடி - ப்ரயத்னம் செய்யாமல். உள்ளம்-மனது, உரை - வார்த்தையைச் சொல்லி அத்தால் வாக் என்னும் இந்திரியத்தைச் சொல்லுகிறது, செயல் - கர்மத்தைச் சொல்லி அதற்குக் காரணமான ஶரீரத்தைச் சொல்லுகிறது, ஆக மனோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களையும் சொன்னபடி, உள்ள - இப்படி ஏற்கனவே இருக்கிறவைகளான, இம்மூன்றையும், உள்ளி - சிந்தித்து, இவை பகவதாராதனத்திற்காக ஏற்பட்டவை என்பதைச் சிந்தித்து என்றபடி, கெடுத்து-விஷயாந்தரங்களில் இருந்து நிவ்ருத்திப்பித்து, குன்றம் - கோவர்த்தன கிரியை, எடுத்த - தூக்கினவனான, பிரான் - உபகாரகனான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய, அடியாரோடும் - தாஸர்களோடும், ஒன்றிநின்று - சேர்ந்து நின்று, நாட்டாரோடு - உலகத்தில் இருக்கும் ஸாமாந்ய ஜனங்களோடு, இயல்வு-ஸஹவாஸத்தை, ஒழிந்து-நிவ்ருத்திசெய்து. ‘ஒழித்து’ என்பது வல்லொத்து மெல்லொத்தாய்த்திரிந்து ஒழிந்து என்றிருக்கிறது என்றபடி, ஸூரி - நித்யஸூரிகளுக்கு, ஸுலபமான - ஸுலபமாய்க் கிடைக்கக்கூடியதான, ஸர்வகுணாநுபவம் - குணம் முதலியவைகளினால் பரிபூர்ணமாகப் பகவானை அனுபவிக்கையை, பெறுமையாலே-அடையாமையாலே. வாய்க் கட்டுண்டு-வாய்கட்டப்பட்டு. இத்தால் விஷயம் போக்யமாயும் பரிபூர்ணமாயும் இருக்கத்தன்னுடைய அஜ்ஞானம் அஶக்திமுதலியவைகளினால் அவற்றை அனுபவிக்கப் பெறுமையால் உண்டான சோகம் இவனுக்கு உண்டாகிறது என்பது தெரிவிக்கப்பட்டதாயிற்று. தன் அவஸ்தையை - இப்படித் தன் இஷ்டப்படி அனுபவிக்கப்பெறாத தன்னுடைய அவஸ்தையை. இரக்கமனத்தோடு-துக்கத்

18755

யணை யரக்கும் மெழுகு மொத்துக் கரிய நாழிகை யூழியில் பெரிய தாய், கங்குலும் பகலும் கண்டுயிலறியாதே, என் சொல்லியுய்வ னிங்கவனை விட்டென்னும்படி ஸம்ஸாரத்திலடி தெரியாதே, 1 ‘மருளொழி’, 2 ‘மங்கவொட்டுன்மாமாயை’, 3 ‘மாயஞ்செய்யேல்’ என்று வளைத்து ப்ரபத்திவாக்யோச்சாரணமே ப்ரஸ்தாநஶங்கநாதமாம்படி அவாவற்று வீடுபெறுமதிகாரிக்கு வைத்த நாள் வரை யெல்லை குறுகி யோகஶாஸ்த்ரங்களிற் சொல்லும் ஆயுரவஸாநங்களாலும் அதிஸந்தோஷத்தை யுண்டாக்கி, ஒன்பது வாசல் தானுடைக் குரம்பை பிரியும்

துடன்கூடியமனதுடன், எரி-அக்னியை, அணை-சேர்ந்திருக்கிற, அரக்கும்-அரக்குக்கும், மெழுகும - மெழுகுக்கும், ஒத்து - ஸத்ருஶனாய், அதைப்போல் உருகி நின்றுஎன்றபடி, கரிய-க்ரூரமான, நாழிகை-ஒவ்வொருநாழிகையும், ஊழியில்-கல்பகாலத்தைக்காட்டிலும், பெரியதாய், கங்குலும்-ராத்திரியிலும், பகலும்-மத்யானத்திலும், கண்டுயில்-கண் துயிலுவதை, அதாவது தூக்கத்தை. இங்கு-இந்த ஸம்ஸாரத்தில், அவனைவிட்டு - அந்தப் பகவானைத் தவிர்த்து, என்சொல்லி - வேறு எதைச்சொல்லி, உய்வன் - உஜ்ஜீவிப்பேன், என்னும்படி - என்று தான் அலற்றும்படி, அடிதெரியாதே -அடிவைக்க வேண்டும் இடம் தெரியாமல். மருள் - அஜ்ஞானத்தை, ஒழி-நிவ்ருத்திசெய். உன்-உன்னுடையதான, உனக்கு ஶேஷபூதமான என்றபடி, மா-பெரியதான, மாயை-ப்ரக்ருதியை, ப்ராக்ருதமான ஶரீரத்தை என்றபடி, மங்கஒட்டு - நசிக்கும்படி செய். மாயம் செய்யேல்-வஞ்சனை செய்யாதே, என்று-இப்படி ப்ரார்த்தித்து, வளைத்து - நிர்ப்பந்தித்து என்றபடி. ப்ரபத்திவாக்யோச்சாரணமே-ப்ரபத்தி வாக்யத்தைச் சொல்லுவதையே, ப்ரஸ்தாநஶங்கநாதமாம்படி - ப்ரயாணம் புறப்படும்பொழுது ஊதும் சங்க த்வனியாகும்படி, அதாவது ப்ரபத்தி வாக்யோச்சாரணமே இவன் புறப்படுவது நிஶ்சயம் என்று காட்டும்படி. அவா-ப்ரதிபந்தகங்கள், அற்று-நிவ்ருத்தங்களாய், அவா-ஆசை, இங்கு எல்லா ப்ரதிபந்தகங்களையும் குறிக்கிறது என்றபடி, வீடுபேறும்-மோக்ஷத்தைப் பெறுகிற. வைத்த-இவனுக்கு விஹிதமான, நாள்-ஆயுஸ்ஸின், வரை-கடைசி எல்லை (வரை-முடிவு), குறுகி-ஸமீபித்து, ஆயுரவஸாநங்களாலும் - ஆயுஸ்ஸு முடிவதைத் தெரிவிக்கும் அடையாளங்களாலும், அதிஸந்தோஷத்தை-மிகுந்த ஸந்தோஷத்தை. ‘ப்ராப்தாவதிர் திவஸ இதி ப்ரீதிஃ ப்ரதிஷ்டாப்யதே’ என்றிவர் தாமே ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தில் அருளிச் செய்திருக்கிறபடியே பரம புருஷார்த்தத்தை அடையும் தினம் கிட்டிவிட்டது என்கிற காரணத்தினால் உண்டாகும் அதிகமான ஸந்தோஷத்தை என்றபடி. ஒன்பது வாசல்தானுடை - ஒன்பது வாசல்களை (த்வாரங்களை) உடைய, ‘தான்’

1.திருவாய்மொழி-10-6-1. 2.திருவாய்மொழி-10-7-10. 3.திருவாய்மொழி-10-10-2.

போது உத்தராயணம் தக்ஷிணாயநம் பூர்வபக்ஷம் அபரபக்ஷம் பகல் இரவு ப்ரஶஸ்தாப்ரஶஸ்ததேஶவிஶேஷ நிமித்தவிஶேஷங்களென்கிற வாசியற சரணமாகும் தன தாளடைந்தார்க் கெல்லாம் மரணமானால் இருள் தருமா ஞாலத்துளினிப்பிறவி வேண்டாதபடி வைகுந்தம் கொடுக்கும் பிரான் இவனுக்கு அடியிலே அஶ்லேஷவிநாஶ ஸர்வதேஶவிஷயங்களாய்க் கொண்டு மாற நினைப்பிட்டுக் கிடந்த உத்தரபூர்வாகாஸ்ரவங்களை மாற்றி, 1 ‘ப்ரியேஷு ஸ்வேஷு

என்பது ஸ்வார்த்தே அனுப்ரயோகம், குரம்பை - ஶரீரத்தை விட்டு, பூர்வபக்ஷம்-சுக்லபக்ஷம். அபரபக்ஷம்-க்ருஷ்ணபக்ஷம். ‘ப்ரஶஸ்த’ இத்யாதி - நல்ல இடம் கெட்ட இடம் என்கிற வ்யத்யாஸம். நிமித்தவிஶேஷம்-நல்ல சகுனம், கெட்ட சகுனம் என்கிற வ்யத்யாஸம். வாசியற - வ்யத்யாஸம் இல்லாமல், அதாவது நல்ல இடம், காலம், சகுனம், இவைகளில் மரித்தவர்களுக்கு நல்லகதி என்றும், அப்படி இல்லாதவர்களுக்கு கெட்டகதி என்றும் மற்றவர்கள் விஷயத்தில் சொன்ன வ்யத்யாஸம் இல்லாமல் என்றபடி. தனதாளடைந்தார்க்கு - தன்னுடைய திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களுக்கு, எல்லாம் - எல்லாவிதமான, சரணமாகும் - ரக்ஷகனாய் நிற்குமவனாய், மரணமானால் - (அவர்கள்) மரணமடைந்தால், அதாவது அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் இந்த ப்ராரப்த ஶரீரத்திற்கு விநாசம்வந்த அளவிலே என்றபடி, இருள்தரு - அஜ்ஞானாந்தகாரத்தை உண்டாக்குகிற, மா - விசாலமான, ஞாலத்துள் - ஜகத்திலே, இனி-இதற்கப்புறம், பிறவி-ஜன்மம், வேண்டாதபடி - உண்டாக வேண்டியது அவஶ்யம் இல்லாதபடி. வைகுந்தம் - மோக்ஷத்தை, கொடுக்கும், பிரான் - உபகாரகன். ‘பிரான்’ என்பது இந்தப் பர்வத்தின் கடைசியில் இருக்கும் ‘வழிப்படுத்தும்’ என்பதுடன் அந்வயிக்கிறது. அடியிலே-உபாயாரம்பகாலத்திலே. ‘அஶ்லேஷ’ இத்யாதி-உபாயானுஷ்டானத்திற்குப் பிறகு செய்யப்படும் கர்மங்களில் அபுத்தி பூர்வகமாகச் செய்யப்படுமவைக்கு அஶ்லேஷமும், அதற்கு முன்பு பண்ணின கர்மங்களுக்கு விநாஶமும், என்று கீழ்பர்வத்தில் நிரூபித்தருளி இருக்கிறபடியே அஶ்லேஷம், விநாஶம் என்கிற பதங்களினால் சொல்லப்படுகிற என்றபடி. மாறநினைப்பிட்டு- மாறும்படி ஸங்கல்பித்து, அதாவது இவனைவிட்டு மாறும்படி ஸங்கல்பித்து என்றபடி. கிடந்த-அத்யந்த விநாசம் பண்ணி வைக்காமல் இவனைவிட்டு மாத்திரம் நிவர்த்திப்பித்து வைத்திருந்த. உத்தரபூர்வாகாஸ்ரவங்களை - உபாயானுஷ்டானத்திற்கு முன்பும் பின்பும் செய்யப்பட்டவைகளாகிய புண்ய பாபங்களை. ‘மாற்றி’ என்று முன்பே மாற்றி வைத்ததை அனுவதித்தபடி. ஸ்வேஷு-தன்னுடையவர்களான, ப்ரியேஷு-இஷ்டர்களிடம்

1. மனுஸ்ம்ருதி-6-79.

ஸுக்ருதம் ஸுஹ்ருத்ஸு த்³விஷத்ஸு ச து³ஷ்க்ருதம்' இத்யாதிகளின்படியே 1 'நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே' என்னும்படி அநுகூலப்ரதிகூலருடைய ஆநுகூல்ய ப்ராதிகூல்யங்களுக்குப் ப²லங்கொடுத்து 2 'சாமிடத் தென்னைக் குறிக்கொள்கண்டாய்', 3 'அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்' என்றும் அவன் கர்மவிஶேஷத்தாலே 4 'யம் யோகிந: ப்ராணவியோககாலே யத்நேந சித்தே விநிவேஶயந்தி' என்னும் அவஸ்தையில்லையாய் காஷ்ட² பாஷாண ஸந்நிப⁴

களில், ஸுக்ருதம் - புண்யத்தையும், த்³விஷத்ஸு - சத்ருக்கள் இடங்களில், து³ஷ்க்ருதம் பாபத்தையும் (கொடுத்துவிட்டு மோக்ஷம் அடைகிறான்). நாட்டில்உள்ள - இந்த தேசத்தில் இருந்தவைகளான, அதாவது ஶாஸ்திரங்களில் சொல்லப்பட்டவைகளாய் இந்த லோகத்தில் ப்ரஸித்தமான, பாவமெல்லாம் - பாபங்கள் எல்லாம், 'ந நிந்தி³தம் கர்ம தத³ஸ்தி லோகே ஸஹஸ்ரஶோ யந்ந மயா வ்யதா⁴யி' என்கிறபடியே தன்னால் செய்யப்படாதவைகள் ஒன்றுமில்லை என்கிற அபிப்பிராயத்தினால் இப்படி அருளிச் செய்தப்படி, சும்மெனாதே - சும் என்கிற ஶப்தத்தைக் கூடச்செய்யாமல், கைவிட்டோடி - என்னை விட்டுக் கழிந்து ஓடி, தூறுகள் - தூறுகளை, பாய்ந்தனவே - பாய்ந்தது துகள். 'தூறுகள்' என்றது சத்ருமித்ரர்களை. இப்படி ஒருவர் செய்த கர்மபலத்தை மற்றொருவர் அனுபவிக்கும்படி நேரிட்டால் அதிப்ரஸங்கம் வருமே என்கிற ஶங்கைக்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார் - 'அநுகூலரு' என்றாரம்பித்து. அநுகூலர் - இஷ்டர்கள். ப்ரதிகூலர் - சத்ருக்கள். ஆநுகூல்யம் - பாகவதனாகிய இவன் விஷயத்தில் செய்யப்பட்ட அனுகூலமான கார்யம். ப²லம் கோடுத்து - பலமாகக்கொடுத்து. சாமிடத்து - மரணம் அடையும் ஸமயத்தில், என்னை, குறிக்கோள் - ஸாவதானமாக அங்கீகரிக்கவேணும், 'கண்டாய்' என்பது இது அவஶ்யம் செய்யவேண்டும் என்பதைக் குறிக்கிறது. அப்போதைக்கு - மரணமடையும் ஸமயத்திற்காக, இப்போதே - இந்த ஸமயத்திலேயே, சோல்லிவைத்தேன் - சொன்னேன். அவன் கர்மவிஶேஷத்தாலே - அவனுடைய ஸுக்ருதம் முதலிய கர்மங்களினாலே, இது பக்தியோக நிஷ்டன் விஷயமானது என்றறியத்தக்கது. ப்ராணவியோககாலே - ப்ராணனை விடும் ஸமயத்தில், யம் - எந்தப்பகவானை, யத்நேந - தங்களுடைய ப்ரயத்னத்தினாலே, சித்தே - மனதில், விநிவேஶயந்தி - வைத்துக் கொள்ளுகிறார்களோ. என்னும் அவஸ்தையில்லையாய் - என்கிறபடியே

1. பெரியாழ்வார் திருமொழி-5-4-3. 2. பெரியாழ்வார் திருமொழி-4-10-2.
3. பெரியாழ்வார் திருமொழி-4-10-1. 4. பாரதம்-ஶாந்தி-46-139.

னாய்க் கிடக்கிலும் 1 'அஹம் ஸ்மராமி' என்கிறபடியே தன்நினைவை இவனுக்கு நினைவாக்கி, 2 'கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபு³த்³த⁴:' என்கிறபடியே அயத்நமாக ஸ்வவிஷயத்தில் வெளிச்சிறப்பாலே அப்ரச்யுத பூர்வ ஸம்ஸ்கார மநோரத²னும்படி ப்³ரஹ்ம ருத்³ராதி³களுக்குப் போலே யமகிங்கர நிரபேக்ஷமாகத் தானே உத்க்ரமண நிமித்தமாக நின்று, வாகாதீ³ந்த்³ரியங்கள் பத்தையும் மநஸ்ஸிலும், இவற்றோடே கூடின மநஸ்ஸை ப்ராணவாயுவிலும், இந்த்³ரியங்கள் பதினொன்றோடும் கூடின ப்ராணனை ஜீவாத்மாவிலும், இப்படி சேர்ந்த திரளை இஶரீரைகதேஶமான ஸூக்ஷ்மபூ⁴தங்களிலும்,

பக்தியோக நிஷ்டர்கள் அந்திம ஸ்மரணத்தைத் தங்களுடைய ப்ரயத்னத்தினால் ஸாதித்துக்கொள்ளவேண்டும் மென்கிற அவஸ்தை இல்லாமல். காஷ்ட² பாஷாண ஸந்நிப⁴னாய் - கட்டை, கல்லு, இவைகளுக்கு துல்யனாய், ஜ்ஞானம் இல்லாமல் என்றபடி. கிடக்கிலும் - கிடந்தபோதிலும். அஹம் - நான், ஸ்மராமி - நினைத்துக் கொள்ளுகிறேன். இவனுக்கு நினைவாக்கி - இவனுக்கு வேண்டியதான அந்திம ப்ரத்யயத்தின் ஸ்தானத்தில் வைத்து, அன்றிக்கே ப்ரபன்னனுக்கும் அந்திம ப்ரத்யயம் அவஶ்யம்வேண்டும் என்கிற பக்ஷத்தில் இவனுக்கு நினைவாக்கி - இவனுடைய அப்படிப்பட்ட நினைவுக்குக் காரணமாக்கி, அதாவது காரணே கார்யோபசாரம் என்றபடி. மதீயயா - என்னுடையதாகிய, தயயைவகேவலம் - தயையினாலே மாத்திரம், அதிப்ரபு³த்³த⁴: - மிகுந்த ஜ்ஞானத்தை உடையவனாய். அயத்நமாக - இவனுடைய ப்ரயத்னம் இல்லாமலே, ஸ்வவிஷயத்தில் - தன் விஷயத்திலே; வெளிச்சிறப்பாலே - ஜ்ஞான வைஶத்யத்தினாலே, அப்ரச்யுத - நழுவிப்போகாததான, பூர்வ - முன்னால் உண்டான, ஸம்ஸ்கார மநோரத²னும்படி - வாஸனை, ஆசை இவைகளை உடையவனும்படி, யமகிங்கர நிரபேக்ஷமாக - யமகிங்கரர்களை அபேக்ஷிக்காமலே. இப்படி யமதூதர்கள் இல்லாமல் உத்க்ரமணம் உண்டோ என்னில், அதற்கு உதாஹரணம் 'ப்³ரஹ்ம' இத்யாதி. ப்ரும்மா, ருத்திரன், யமன் முதலியவர்கள் யமகிங்கரர்களுக்கு வசப்பட்டவர்கள் இல்லையல்லவா. தானே - ஸர்வேஶ்வரனாகிய தானே. உத்க்ரமண நிமித்தமாக - உத்க்ராந்திக்குக் காரணமாக. வாகாதீ³ந்த்³ரியங்கள் - வாய் முதலிய இந்திரியங்கள். பத்தையும் - வாக், கை, கால், குதம், உபஸ்தம் என்று சொல்லப்படுகிற கர்மேந்திரியங்கள் ஐந்து, காது, தோல், கண், மூக்கு, நாக்கு என்கிற ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்து, ஆகப்பத்து இந்திரியங்களையும் என்றபடி. இவற்றோடே கூடின - இந்தப்பத்து இந்திரியங்களோடு கூடின, திரளை - ஸமூஹத்தை,

1. வாராஹ சரமஶ்லோகம். 2. பெரியகத்யம்.

இவையெல்லாவற்றையும் கூட ஹ்ருதயகதனை தன் பக்கலிலே சேர்த்து, இவனை இளைப்பாற்றி, இப்படிப் பொதுவான உத்க்ராந்தி நடந்தால், ஸுஸூக்ஷ்மமான விவிதலோகாந்தரங்களுக்கும் வழிகளான ஹ்ருதயநாடி நூற்றிலும் ப்ரவேசிப்பியாதே, ஸுஷும்நை என்றும் ப்ரஹ்மநாடி என்றும் மூர்த்தந்யநாடி என்றும் பேர்பெற்ற ஹ்ருதயமத்யநாடியில் மோக்ஷத்வாரபூதமான அக்ரம் வெளிச்செறிக்கப்பண்ணி, அதிலே ப்ராணேந்த்ரியஸம்யுக்தஸூக்ஷ்மசரீரத்தோடே கூட ப்ரவேசிப்பித்து, பத்மகோசஸ்தநகதளீபுஷ்பத்ருஷ்டாந்த நிதர்சிதமாய்க் கொண்டு அவலம்பிக்கிற ஹ்ருத்புண்டரீகமத்யத்திலே ஸூக்ஷ்மஸுஷிரத்தினின்றும் மேலே கொண்டேறி ஏகாதச

இச்சரீரைகதேசமான - இந்த ஸ்தூல சரீரத்தில் ஒருபாகத்தில் இருந்து எடுக்கப்பட்ட, ஸூக்ஷ்மபஞ்சபூதங்களிலும் - ஸாராம்சமான ஐந்து பூதங்களிலும். ஹ்ருதயகதனை - ஹ்ருதயகமலத்தில் இருக்கிற. தன்பக்கலிலே-ஹார்த்தனை தன்னிடத்திலே என்றபடி. இளைப்பாற்றி-ச்ரமபரிஹாரம் செய்து, அதாவது உத்க்ரமணத்தினால் உண்டான ச்ரமத்தைத் தீர்த்து, போதுவான - மோக்ஷத்திற்குப் போகிறவர்களுக்கும், மற்ற இடங்களுக்குப் போகிறவர்களுக்கும் இதுவரையில் ஸமமான, அதாவது ஒருவித வ்யத்யாஸமு மில்லாத என்றபடி. உத்க்ராந்தி-சரீரத்தைவிட்டு வெளியில் கிளம்புதல். லோகாந்தரங்களுக்கும் - ஸ்வர்க்காதி லோகங்களுக்கும். ஹ்ருதயநாடி- ஹ்ருதயத்தில் இருந்து புறப்படும் நாடிகள். ஹ்ருதயமத்யநாடியில் - ஹ்ருதயத்தில் இருந்து புறப்படும் நாடிகளின் நடுவில் இருக்கும் நாடியில். மோக்ஷத்வாரபூதமான - மோக்ஷத்திற்குப் போகிற வழிக்கு வாசல்படிபோல் ஆரம்பமான. அக்ரம் - அக்ரம், நுனி என்றபடி. வெளிச் செறிக்கப்பண்ணி - ப்ரகாசிக்கும்படி செய்து. 1 'தத்ப்ரகாசிதத்வார:' என்றது இங்கு விவக்ஷிதம். பத்மகோச - தாமரைமொக்கு, ஸ்தந - ஸ்தனம், கதளீபுஷ்ப - வாழைப்பூ, இவைகளாகிற உதாஹரணங்களாலே, நிதர்சிதமாய் - காண்பிக்கப்பட்டதாய். அவலம்பிக்கிற - தொங்கிக்கொண்டிருக்கிற, ஹ்ருத்புண்டரீகமத்யத்திலே- தாமரைப் புஷ்பம்போன்ற ஹ்ருதயத்தின் நடுவிலே. ஸூக்ஷ்மஸுஷிரத்தினின்றும் - அல்பமான த்வாரத்தில் இருந்து, மேலே கொண்டேறி - ஜீவாத்மாவை எடுத்துக்கொண்டு மேலே புறப்பட்டு, ஏகாதசத்வாரமான - பதினொரு வாசல்களையுடையதான, அதாவது இரண்டு கண், இரண்டு காது, இரண்டு மூக்கு, வாய், குதம், சிச்நம், நாபீ,

1. அந்தப் பகவானால் ப்ரகாசம் செய்யப்பட்ட வழியை உடையவனாய்.

ஸர்வோத்தரேஷ்வபி பகவந்நிவேதித நிர்மால்யாதே: உபயோகோ ந சாஸ்த்ரீய: — இதி ।

[ஸித்தாந்த:]

அபிதீயதே — யச்ச பகவந்நிவேதிதாதேர்போக்த்ருத்வஸாதநம், தச்ச மஹதாம் தூரபரிஹரணீயேதி த்வாத்ருசைரபி சாஸ்த்ராண்யாவக்ஷதே । ததா ஹி ரஹஸ்யாம்நாய ப்ராஹ்மணே "அத யதி வக்தா த்ருதீயலக்ஷணோ பவேத் உதாஸீநஸ்து த்விதீயலக்ஷண: ஸ்யாத் ச உதாஸீந ஏவ நியோஜ்யோ பவதி, பகவதச்ச ஸர்வாமபி வ்ருத்திம் நிவர்த்தயதே த்ருதீய லக்ஷணாச்ச ததா சதுர்த்த லக்ஷணாச்ச" இதி நிவேதிதஸ்ய ச ஸ்வாசார்ய ப்ரப்ருதி யோக்யேப்ய: ப்ரதேயத்வம் ததலாபே யதா லாபம் ஜ்ஞாதயோக்யேப்ய: ப்ரதேயத்வம் உக்த்வா ப்ரதியாயாநந்தரம் அபிதீயதே—'அத யதி கச்சித் ஸம்ப்ரக்ஷாளித பாணிபாதோ ஹிதாசமநோ பவேச்ச, ந ச ஜ்ஞாயேத, ப்ருஷ்டோவ்யா

யையும்விட உத்க்ருஷ்டனாயிருந்தபோதிலும் அவருக்கு நிவேதனம் செய்பட்ட நிர்மால்யம் முதலியவைகளை உபயோகப்படுத்துவது சாஸ்த்திரத்தில் ஏற்பட்டதல்ல—என்று.

[ஸித்தாந்தம்.]

இதற்கு (ஸமாதானம்) சொல்லப்படுகிறது. பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட வஸ்துமுதலியது ஸாப்பிடத்தக்கதல்ல என்று சொல்லப்பட்டதே, அது பெரியோர்களினால் வெகுதூரத்தில் விலக்கத்தக்கவர்களான உன்னைப்போல் இருப்பவர்களினால் ஸாப்பிடத்தகாதது என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அப்படியே ரஹஸ்யாம்நாய ப்ராம்மணத்தில் 'பதில்சொல்லுகிறவன் மூன்றுவதுவகுப்பில்சேர்ந்த அடையாளமுடையவனாகவும் இரண்டாவதுவகுப்பின் அடையாளமான உதாஸீனனாகவுமிருந்தானேயானால் உதாஸீனனே பகவானுடைய கார்யத்தில் ஏற்படுத்தக்கூடியவனாவான். மூன்றுவதுவகுப்பின் லக்ஷண முடையவனிடமிருந்தும் நான்காவதுவகுப்பின் லக்ஷணமுடையவனிடமிருந்தும் பகவானைச்சேர்ந்த எல்லாக் கைங்கர்யங்களும் திரும்பிவிடும். அதாவது அவர்களால் செய்யக்கூடியது ஆகாது' என்று பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்டவஸ்துவைத் தன்னுடைய ஆசார்யன்முதலாக யோக்யர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அவர்கள் கிடைக்காவிடில் கிடைத்ததற்குள் யோக்யர்கள்என்று அறியப்பட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, பிறகு சொல்லப்படுகிறது—' பிறகு ஒருவன் கைகால்களை அலம்

[illegible]

பிக்கொண்டு தன்னைக்குறித்து வருவானேயானால் அவன் தன்னால் அறியப்படாதவனாயிருக்கும் பக்ஷத்தில் அவனை இவ்விதமாகக் கேட்கவேண்டும்- 'நீ இப்பொழுது கிடைக்கிற அன்னத்தினால் என்னசெய்யப்போகிறாய்' என்று. அவன் 'எனக்குத் தெரிந்தபடி பகவானுக்கு ஆராதனம்செய்யப்போகிறேன்' என்று பதில்சொல்லுவானேயானால் அந்த அன்னம் அவனுக்குக் கொடுக்கத்தக்கதாகும். 'நான் பகவானை ஆராதனம் செய்யும் விதத்தை அறியாதவன், ஆனபோதிலும் ஆஹாரம் கிடைப்பதற்கு இது உபாயம்என்று நினைத்து உன்னிடம்வந்தேன்' என்று சொல்லுவானேயானால் அந்த அன்னத்தை உள்ளேயே அடைத்துவைத்துவிட்டு' என்றிவை முதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாத்மஸம்ஹிதையில் சர்யாபாதத்தில் பனிரண்டாவது அத்யாயத்தில் 'நாய்களுக்குப் புரோடாசம்போல நீசர்களுக்குப் பகவானுடைய ப்ரஸாதத்தைக்கொடுப்பது ஒருவராலும் அங்கீகரிக்கப்படவில்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே ஈச்வரஸம்ஹிதையில் "ஓ! ப்ரும்மாவே! பகவானிடத்தில் பக்தி செய்துகொண்டிருக்கிற புருஷன் இந்தலோகத்தில் துர்லபன், அவர்களுக்குள்ளும் உண்மையாக அபிப்ராயத்தைச் செலுத்திய பக்தன் மிகவும் துர்லபன். அவன் பகவானுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை அடைவதற்கு யோக்கியன். ஸித்தாந்தத்தை உபதேசிப்பதற்கும் பகவானுக்கு நிவேதனம்செய்யப்பட்ட வஸ்துவைக்கொடுப்பதற்கும், பகவானால் அனுபவிக்கப்பட்ட மாலை முதலியவைகளைக் கொடுப்பதற்கும், அவைகளை அனுபவிப்பதற்கும் தகுந்த பாத்திரனாகிறான், ஆகையால் அப்படிப்பட்ட பாவம் இல்லாதவர்களுக்கும் நாஸ்திகர்களுக்கும் கெட்டஸ்வபாவமுடையவர்களுக்கும் தான்

[illegible]

தர்மத்தை அநுஷ்டித்துக் கொண்டிருக்கிற புருஷனால் அந்தப்பகவானுடைய நிவேதனம் சோராமல்இருக்கும்படி பரிஹரிக்கத்தக்கது. ஸ்திரீகளுக்கும் ஶூத்திரர்களுக்கும் குழந்தைகளுக்கும் தீட்டை உடையவர்களுக்கும் இன்னும் சாஸ்திரத்தில் நிவேதிக்கப்பட்ட மற்றவர்களுக்கும் மந்திரத்தினால் பரிசுத்தம்செய்யப்பட்ட அந்த நைவேத்யத்தை எவன்கொடுக்கிறானோ அவன் காம்யபலன்களில் ஆசையுடையவனாய் இருந்தபோதிலும் ஆசை இல்லாதவனாயிருந்தபோதிலும், மந்திரம் தெரிந்தவனாயிருந்தபோதிலும், நல்ல வ்ரதங்களில் நிஷ்டையை உடையவனாயிருந்தபோதிலும், ஸித்திபெற்றவனாயிருந்தபோதிலும் பதிதனாயிருக்கையை அடைகிறான். ஆரம்பதசையில் இருப்பவனைப்பற்றிக் கேட்கவேண்டாம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஈச்வரஸம்ஹிதையில் அப்படிக்கொடுத்தவன் ப்ராயச்சித்தம் என்பதும் 'விஷ்ணுவை ஆராதனம் செய்பவர்களினால் அந்த அன்னம் பக்தியில்லாதவர்களிடம் இருந்து காப்பாற்றத்தக்கது. அப்படிக்கொடுத்தவன் அபாத்திரத்தில் கொடுத்ததினால் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியவனாவான். ஓ! மஹரிஷியே! மந்திரத்தினால் பரிசுத்தம்செய்யப்பட்ட அந்த நிவேதிதம் நாய் நரி பூனை பக்ஷிகள் குரங்குகள் பெரிச்சாளி இவைகளிடமிருந்து எப்பொழுதும் ப்ராணனைப்போல ரக்ஷிக்கத்தக்கதாகும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாரதீயஸம்ஹிதையில் இவ்விதமானது ப்ராயச்சித்தம் என்று அதின்விசேஷமும் 'விஷ்ணுவினிடத்தில் பக்தியுடன்கூடினவர்களாய் வைஷ்ணவர்களான ப்ராம்மணர்கள் க்ஷத்திரியர்கள் வைச்யர்கள் இவர்களினால் பகவானுக்கு நிவேதனம்செய்யப்பட்டது சாப்பிடத்தக்கதாகும். அந்த நிவேதனம் மற்றவர்களினால்

[illegible]

ஸாப்பிடப்பட்டதேயானல் கொடுத்தவன் ஸாவதானத்துடன் இருந்து திருவஷ்டாக்ஷரத்தை நூற்றெட்டுத்தடவை ஜபம்செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் உன்னைப்போல் இருப்பவர்களுக்கு நிவேதிதத்தைக் கொடுத்தால் நிவேதிதத்திற்கு நாசமே உண்டாகும். ரஹஸ்யாம்நாயத்தில் ப்ரும்மசர்யாச்ரமத்தைப்பற்றிச் சொல்லுமிடத்தில் 'இப்படி மிகுதியாயிருந்ததேயானல் மிகுதியென்று எதைப்பற்றிச் சொல்லுகிறது சப்தம்' என்ருரம்பித்து 'அது மிகுதிஎன்று சொல்லப்படும்' என்னுமளவாக மிகுதியை நிரூபித்து 'அதை அந்தசாஸ்திரத்தை அங்கீகரித்தவனுக்குக் கொடுக்கவேண்டும்' என்ருரம்பித்து 'ரஹஸ்யாம்நாயத்தில் நிஷ்டையுடையவனுக்குக் கொடுக்கவேண்டும். அவன் இல்லாதபக்ஷத்தில் வேதத்தில் சொல்லிய தர்மங்களாகிற பகவானுடைய ஆராதனத்தைச் செய்கிறவனுக்குக் கொடுக்கவேண்டும், அதுவும்இல்லாதபக்ஷத்தில் அன்னம் என்பது ஸாப்பிடக்கூடியது என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினுல் எதற்காவது ஒன்றுக்கு அவச்யம் கொடுக்கவேண்டும்என்பது ஏற்பட்டிருக்கையினுல் பகவானுடைய கைங்கர்யங்களைச் செய்யக்கூடியவைகளான பசுமுதலியவைகளுக்கும், அதுவுமில்லாதபக்ஷத்தில் அப்படிப்பட்ட யானைமுதலியவைகளுக்கும் அதுவுமில்லாதபக்ஷத்தில் பகவானை ஆராதனம் செய்வதற்கு உபயோகிக்கத்தக்கவைகளான செடிமரம் முதலிய ஸ்தாவரங்களின் வேரிலாவது வைக்கவேண்டும்' என்றுசொல்லி, மேல் வாக்யத்தில் 'அன்னம் எவ்விததிலும் நாசம் செய்யத்தக்கதாகாது, அன்னத்திற்கு நாசமாவது எறிந்துவிடுதல், பள்ளம்வெட்டிப் புதைத்தல், ஜலத்தில்போடுதல், காக்கை பன்றி முதலியவைகளுக்காவது பகவானுடைய கைங்கர்யத்திற்கு யோக்யதை இல்லாத மற்றைய ஸ்தாவரஜங்கமங்களுக்காவது கொடுத்தல், இதுதான் அன்னத்திற்கு நாசம்' என்று சொல்லப்

[illegible]

பட்டிருக்கிறது. இவைஎல்லாவற்றையும் நினைத்து ஆகமப்ராமாண்யத்தில் '.எவர்கள் உங்களைப்போன்ற மூர்க்கர்களோ அவர்களுக்கே பகவந் நிவேதிதமானது ஸாப்பிடத்தகாதது என்று மறுத்திருக்கும் லக்ஷணங்கள் வைஷ்ணவர்களான அதிகாரிகளினுல் அவையெல்லாம் அங்கீகரிக்கப்பட்டதாய் யஜ்ஞத்தில் ஸோமபானத்தைப்போல பாபங்களின் கும்பல்களைப் போக்கடிக்க சக்திஉடையதாகும். வைஷ்ணவர்களல்லாத மற்றவர்களுக்கு அந்தப்பகவானுக்கு நிவேதனம்செய்யப்பட்டது நாய்களுக்குப் புரோடாசத்தைப்போல தொடக்கூடாததாகும்' 'என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது.

'விஷ்ணுவினுல் ஸாப்பிடப்பட்டதை ஸாப்பிடுகிருர்கள்' என்றிவை முதலிய வாக்யங்களில் நிகழ்காலமாகச் சொல்லியிருப்பதினுல் விதிக்கிறது என்பது ஏற்படவில்லை என்று சொல்லப்பட்டதே, அது மீமாம்ஸகர்களுடைய கோஷ்டியில் விலக்கப்பட்டவனுய் இருப்பதினுல் சொல்லப்பட்டவார்த்தை. அந்தந்தவாக்யங்களில் இதற்குமுன் ஏற்படாத அர்த்தத்தைச் சொல்லுவதினுலல்லவோ விதிஎன்பது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அப்படிக்கில்லாவிடில் அந்தந்தவாக்யங்களில் யாகம்செய்கிருன், ஹோமம் செய்கிருன், குத்துகிருர்கள், ப்ரோக்ஷணம் செய்கிருன், என்றிவை முதலியவாக்யங்களிலும் நிகழ்காலமாகச் சொல்லியிருப்பதினுல் விதிக்கிறது என்பது விட்டுவிட வேண்டிவரும். 'ஆகையினுல் வித்வான்கள் பகவானுக்கு ஸமர்ப்பிவிக்கப்பட்டதை ஸாப்பிடவேண்டும்' என்கிற இந்தவாக்யத்தில் கடைசியில் விதியேநேரில் அறியப்படுகிறது. 'விஷ்ணுவினுல் ஸாப்

[illegible]

பிடப்பட்டதை ஸாப்பிடுகிருர்கள்' என்றிவை முதலியஇடங்களில் விதி என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதேயாஞல் அப்பொழுது அதிஞலேயே இதிஞல் சொல்லப்படுகிற அர்த்தம் ஏற்பட்டுவிட்டபடியிஞல் ஸாப்பிட வேண்டும் என்கிறது விதியைச்சொல்லுகிறது என்பது ஸித்திக்காது என்னில் அப்பொழுது இதற்கு அர்த்தம்என்ன? முன்பு சொல்லியதை அநுவாதம்செய்வதுமாத்திரம் தான்என்னில், அப்படி இருந்தபோதிலும் இதிஞலேயே ஸாப்பிடுகிருர்கள் என்பதுமுதலியது விதிஎன்று உறுதிப் படுத்தப்பட்டது. முன்ஞல் ஏற்படாதது அநுவாதம் செய்யப்படுகிறது என்று சொல்லுவதில் ஒருவிதயுக்தியும் ஏற்படவில்லையல்லவா. அநுவாதம் செய்வது ஒரு ப்ரயோஜனமும் இல்லாததாக இருக்காது. இந்த அநுவாதத்திஞல் விதிக்கப்படுகிற வேறுஒன்றும் காணப்படவில்லை. ஆகையிஞல் ப்ரயோஜனத்தை யோசிக்கும் இடத்தில் முன்புசொல்லியவைகளும் விதிதான்என்பதை ஸ்திரப்படுத்துவதே இதற்குப்ரயோஜனம் என்பது ஏற்பட்டது. அன்றிக்கே விதியைச்சொல்லுகிற பகுதி யிருக்கிறபடியிஞல் இதுவே விதி, ஸாப்பிடுகிருர்கள் என்பது முதலியதோவெனில் இந்த விதியில் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்ட விசேஷங்களைத் தெரிவித்துக் கொண்டு அதற்கு அநுவாதமாக இருங்கிறபடியிஞல் அதற்கே உபகாரம் செய்கிறது, அப்படி இருந்தபோதிலும் விதிப்பதிலேயே முடிவு உண்டாகிறது என்பது ஸித்தித்துவிட்டது. ச்ருதி ஏற்படுவதற்குமுன்பு ஸ்ம்ருதிமுதலியவைகளை அநுஸரிக்கவேண்டு மாகையிஞல் ச்ருதியிஞல் ஏற்பட்ட அர்த்தத்திற்கு ஸ்ம்ருதியிஞல் பாதம் உண்டாகிறது என்று ஸங்கேதிப்பது உசிதமல்ல. பின்னை எப்படிஎன்னில்:— ச்ருதிக்கு விருத்

[illegible]

தங்களான ஸ்ம்ருதி முதலியவைகளே பாதிக்கப்படும் என்று விரோதாதிகரணத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியாகையிஞல் 'நிர்மால்யத்தையும் நிவேதிதத்தையும்' என்றிவை முதலிய வசனங்கள் நம்பக்கூடியவைகளின் வரிசையில் சேர்ந்ததாயிருந்தபோதிலும் பொதுவாக இருக்கிறபடியிஞல் விலக்கக்கூடிய இடத்தை யுடையதாகையிஞல் ச்ருதியிஞல் விதிக்கப்பட்ட விசேஷத்தைத்தவிர மற்றவைகளைப் பற்றியது என்று உத்ஸர்க்காபவர்க்க ந்யாயத்திஞலும் பொதுவாகச் சொல்லியிருப்பதற்கு அதேஇடத்தில் சொல்லிய விசேஷத்தில் முடிவுபெறுகிறது என்கிற ந்யாயத்திஞலும் ஏற்பட்டிருக்கிறது. எப்படி என்னில்:— ருத்திரன் முதலிய இதர தேவதைகளுக்கு நிவேதனம் செய்யப்பட்ட அன்னம் முதலியது ஸாப்பிடத்தகாதது என்பது அந்த சாஸ்திரங்களிஞலேயே ஸித்திக்கிறது என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதிஞல் அதில் விவாதமில்லை. ஆகையிஞலே ருத்திரனே பரதேவதை என்று நிரூபிப்பதில் ஆக்ரஹத்தை உடையவர்களிஞலும் அவர்களிஞுடைய உச்சிஷ்டத்தை விட்டுவிடுவதிஞல் அந்த தேவதைகள் தாழ்ந்த தேவதைகள் என்ருபேக்ஷித்துக்கொண்டு 'நீ பரப்ருஹ்மத்திஞுடைய' என்கிற மந்திரத்திஞல் அவர்களுடைய உச்சிஷ்டத்தை விட்டுவிடுவது வேறு ஒரு காரணத்திஞல் ஏற்பட்டதாகையிஞலே அது அவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதற்கு அடையாளம் என்பது நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க பொதுவாக இருக்கிற நிர்மால்யம், நிவேத்யம் என்கிற பதங்களுக்கு விசேஷத்

ஶாந விஶேஷ ஸமர்பிதே தஸ்மிந்நேவ பர்யவஸாநம் நாந்யத்ரேதி ஸ்வீகார்யம் | யதா பஶுஶப்தஸ்ய சாகஶப்தோக்த விஶேஷ பர்யவஸாநம், ததிஹாபீதி ந ஸங்கட: கிஞ்சித் | அயமர்தோ ந்யாய நிரபேக்ஷைரேவ வசநை: ஸித்யதே | யதா ப்ராஹ்மபுராணே "விஷ்ணோர் நிவேதிதம் ஶுத்தம் முநிபிர் போஜ்யமுச்யதே | அந்யதேவ நிவேத்யம் ஸ்யாத் புக்த்வா சாந்த்ராயணம் சரேத் ||" இதி |

யத்து விதுரகவாதி விகல்போக்தூஷணே வர்ணிதம், தச்ச ததா ஶோபேத, யதிவயம் தேஷாம் ஹேதுகக்ஷீதிஸம்ஶயீமஹி, யதிவா தூஷணாந்தகீர்வாக்யவிஷயத்வேநாபேக்ஷிஷ்மஹி | ஸித்தாந்தே விஶேஷவிஷயாணாம் தத்ரோக்தாநாம் ப்ரவ்ருத்தே: பரதோ பஹூநாம் ஶாஸ்த்ர ஸம்மதத்வாகார வர்ணநம் தத்ப்ரயோஜனம் நோபயுஜ்யதே | ந சாதிப்ரஸங்க:— ஸ்வயமஸாதகத்வாத் | ஸாதகா ந ஹ்ய ஸாதக ஸந்நிதாநவஶாத் ஹி ந ஸ்வயம் கார்யம்

தைப்பற்றிய அபேக்ஷை இருக்கையில் அபேக்ஷிக்கப்படுகிறதாகிய சாஸ்திரத்தினால் தடுக்கப்படுகிற விசேஷம் அறியப்பட்டிருந்தால் அதிலேயே முடிவுபெறுகிறது, வேறு ஒரு இடத்தில் அல்ல என்று ஒப்புக்கொள்ள வேண்டியது அவச்யம். எப்படி என்னில்:— பசு என்னும் பதத்திற்கு சாக என்னும் பதத்தினால் சொல்லப்படுகிற ஆடு என்கிற விசேஷத்தில் முடிவு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அதைப்போல. அப்படியே இவ்விடத்திலும் என்று ஒருவித ஸங்கடமும் இல்லை. இந்த அர்த்தம் ந்யாயத்தை அபேக்ஷிக்காமலே வசனங்களினாலேயே ஏற்படுகிறது. அப்படியே ப்ராம்மபுராணத்தில் 'விஷ்ணுவிற்கு நிவேதனம்செய்யப்பட்டது பரிசுத்தமானது, அது ரிஷிகளினால் சாப்பிடத்தக்கதாகச் சொல்லப்படுகிறது. வேறு நிவேதனம் செய்யப்பட்டவைகள் நிர்மால்யம், அதை ஸாப்பிட்டால் சாந்திராயண வ்ரதம் செய்யவேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தகப்பனாயிருக்கை முதலிய விகல்பங்களைச் செய்து தூஷணங்களினால் கூத்தாடப்பட்டதே, அதுவும் அப்பொழுது அழகாகும், எப்பொழுது என்னில்:— நாங்கள் அவைகள் காரணம் என்பதை ஒப்புக்கொள்ளுவோமானாலும் அந்தச் சில உச்சிஷ்டங்களை ஸாப்பிடலாம் என்று அநுமதி செய்திருக்கிற வசனங்களுக்கு இது விஷயமென்று எங்களால் நிரூபிக்கப்பட்டதேயானாலும், அப்படிக்கில்லாமல் விசேஷ வசனங்களினால் விதி ஏற்பட்டிருக்கிறபடியினால் அதில் ருசியை உண்டாக்குவதற்காக சொல்லப்பட்ட வசனங்களினால் தெரிவிக்கப்படுகிற வாஸ்தவமான அந்தந்த தகப்பனாயிருக்கை முதலிய ஆகாரங்களைச் சொல்லியிருப்பது நிந்தைக்கு இடமாகாது. அதிப்ரஸங்கதோஷமும் ... பாத்திரம் ஸாதகமல்லவாகையினால். ஸாதகமான வசனங்களுக்கு ... தாசையாயிருப்பது

திருமணம் ஸம்ப்ரோக்ஷணம்.

வ்ருத்தக்ஷீரநதியுடன் கூடின ஸித்தாரண்யம் என்று பெயருடைய திருமணம் என்னும் ஊரில் ஸ்ரீஸுந்தரவல்லிஸமேத ஸ்ரீஸுந்தரராஜப்பெருமாளுக்கு இந்த குரோதன ௵ ஆவணி ௴ 12௳ மஹா ஸம்ப்ரோக்ஷணம் நடந்து, ஷ தேவஸ்தானம் தீர்த்தக்காரர் ஸ்ரீ. உ.ப. திருமழிசை ஆஸூர் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி வேதபாராயணமும் ப்ரபந்த ஸேவையும் நடத்தி தீர்த்தம் பரிக்ரஹம் பண்ணி ஸகல கார்யங்களையும் நடத்திவைத்தார்.

AGENCIA MERCANTIL Y MARITIMA.
INTERNATIONAL BUILDINGS.
LUDHIANA (INDIA)

ரோஜா மொக்கு முத்துமாலைகள்.
26-தினுஸுகள்.

இந்த முத்துக்கள் ஆச்சர்யப்படும்படியான ப்ரகாசமுடையவை. அவைகளை நிஜமானவும், போலிமுத்துக்களுடன் வைத்துப்பாருங்கள். நிஜமுத்தைவிட மட்டம் என்று தோன்றினாலும் போலிமுத்துக்களைக்காட்டிலும் உத்க்ருஷ்டம் என்று உங்களுக்குத் தோன்றுவிட்டாலும் வாங்கின 8-தினங்களுக்குள் மாலையை வாப்ஸ் செய்தால் கொடுக்கப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்படும். 18-அங்குல நீளமுள்ள தங்கமுகப்புடைய மாலை ம்ருதுவானபட்டால் மூடப்பட்ட அழகான சிறுபெட்டியுடன் ரூ 8-க்கு வி. பி. யில் அனுப்பப்படும். ஏமாறாமல் முன்னமேயே எழுதித் தருவித்துக்கொள்ளுங்கள். பலவித மோஸ்தர்களாய் 16-விதமான வர்ணத்தில் வாஸனையுடன் கூடினதாகச் செய்யப்பட்டிருக்கிறது.

அப்பு என்ற அலூமினியம் சோப்பு.

ஐரோப்பாவில் ஒருபெரிய தொழிற்சாலையில் தயார் செய்யப்பட்டது. அவலக்ஷணமான அலூமினியம் பாத்ரங்களை உபயோகப்படுத்தி உங்களுடைய தேஹாரோக்யத்தை ஏன் பாழு பண்ணுகிறீர்கள். இந்த ஸோப்பை உபயோகித்துக் கழுவி சுத்திசெய்துகொள்ளுங்கள். இது சுத்திசெய்து மெருகு கொடுக்கும். 100-பாத்ரங்களை சுத்திசெய்ய ஒரே சோப் போதுமானது. உலகத்திலிருக்கும் ஹாஸ்டல்கள், போஜனசாலை ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகளில் இது உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

சின்னப்பெட்டி 10-அணா, பெரியபெட்டி ரூ 1—4—0.

ஸ்வல்பமாய் வாங்கினால் வி. பி. யில் அனுப்பமுடியாது. அலூமினியம் ஸோப்புக்கு முன் பணமாகவே கட்டவேண்டும்.

International Buildings, Ludhiana (Punjab) } { Distributors, Agencia Mercantil -y- Martima.

ச்ருதப்ரகாசிகா ஸஹிதம், ஸ்ரீபாஷ்யம் தமிழ்மொழி பெயர்ப்பு.

முதல் ஸஞ்சிகை (லகுஸித்தாந்தம் முடிய)	ரூ. ...	1	4	0
2-வது மஹா பூர்வபக்ஷம் முடிய	...	0	10	0
3-வது ஜிஜ்ஞாஸாதிகரணம்	...	0	12	0
ஸ்ரீ வசநபூஷண ப்ரமாணத்திரட்டு அரும்பத விளக்கம்	...	1	4	0
திருவாய்மொழி ஈட்டின் ப்ரமாணத்திரட்டு முதல் 3-பத்து	...	0	12	0

திருப்புறம்பியம் போஸ்டு, கும்பகோணம். }

T. D. ராமஸ்வாமி நாயுடு

ஸம்ப்ரோக்ஷணம், காஞ்சீபுரம்.

ப்ரதிவாதி பயங்கர மடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. உப. காஞ்சி அனந்தாசார்யர் வடதேசங்களில் நம்முடைய மதத்தை பரவச்செய்து வருவது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். இவர் க்ருஹஸ்தராயிருந்தாலும், நல்ல வைராக்ய நிதி. இவர் தன்னுடைய திருமாளிகைக்கு எதிரில் சிறிய ஸன்னதியாக இருந்ததை 40000-ரூபாய் செலவழித்து பெரிய ஸன்னதியாகக்கட்டி அதில் ப்ரதிவாதி பயங்கர அண்ணன் ஸ்வாமியின் விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டைசெய்து வைத்தார். சென்ற ஐப்பசி௴ 6௳ ம்ருத்ஸங்க்ரஹணத்திற்கு ஆரம்பித்து, 9௳ விமானப்ரதிஷ்டையும் ஸம்ப்ரோக்ஷணமும் நடந்தன. 10௳ மந்த்ரபூதமான கலசங்களில் ஜபித்துவைத்திருந்த ஜலத்தால் அண்ணன் விக்ரஹத்துக்கு திருமஞ்சனம் செய்வித்து அன்று ராத்ரி ஊர்வலத்துடன் பட்டணப்ரவேசம் செய்து கோயிலுக்குள் எழுந்தருளப் பண்ணப்பட்டார். ருக்யஜுஸ் ஸாமவேதங்களிலும் திவ்யப்ரபந்தத்தில் அன்வயித்தவர்களுக்கும் இன்னும் அநேகக்ரந்தங்களை பாராயணம் செய்த ஸ்வாமிகளுக்கும் உசிதமான ஸம்பாவனைகள் செய்து வைதிககார்யங்கள் வெகு அழகாகமுடிந்தன.

பதினைந்தாவதுவார்ஷிக மஹாஸங்கம்.

இந்த ஸங்கத்தை திருநெல்வேலியில் செய்யலாமென்று யோஜித்ததில் அடுத்த வருஷம் அந்த ஸ்தலத்தார்கள் செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். இவ்வருஷம் ஆழ்வார் திருநகரியில் நடத்தவேண்டுமென்று உத்தேசம். இதை பகவான் பூர்த்தி செய்துவைப்பார் என்று நம்புகிறோம். இதைச்சேர்ந்த விஷயங்கள் இந்த டிசம்பர்௴ 20௳ வெளிவரும் தீபிகையில் ப்ரசுரமாகும். அதில் ஆஹ்வாநபத்ரம், தினசரிக்ரமம் முதலிய விஷயங்கள் அடங்கி இருக்கும்.

கார்யதர்சி.

தேசிகர் நூற்றந்தாதியும், வாழித்திருநாமங்களும்.

வயலூர் கந்தாடை மன்னப்பங்கார் அருளிச்செய்த ஸ்ரீதேசிகர் நூற்றந்தாதியும் ஸ்ரீமத் திருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி அருளிச்செய்த வாழித்திருநாமங்களும் திருமலை ஈச்சம்பாடி ஸ்ரீநிவாஸராகவாசார்யரால் சோதிக்கப்பட்டு ஸ்ரீ. உப. வரதாசார்யர், ஸ்ரீமான் வேலூர் நாராயணஸாமி தாஸர், காஞ்சீபுரம் காலக்ஷேப கைங்கர்யம் ஸ. தி. ராமஸ்வாமி செட்டியார் அவர்களாலும் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. சுத்தமாக ஸங்கலனம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 4. வேண்டுவோர் வேலூர் ரிகார்டு அச்சுக்கூடம் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.